தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, கார்த்திகை 12 (28-11-'59). சனிக்கிழமை | இதழ் 24

வருக! வருக!

இது நேருவின் கருவி...

குரைக்கிற நாய்க்கு இரண்டு எலும்புத்துண்டுகளைப் போட்டு ஏமாற்றுவது திருடர் தொழில்-ஊழலைக் கண்டிக்கிற மனிதர்கட்கு ஒரு பதவியைத் தருவது காங்கிரசாரின் திருவிளையாடல். மகாவீர் தியாகி என்றொரு அணுகுண்டு மனிதர்; கடந்த பாராளும் மன்றத்தில் சடசட வெனக் கேள்விக் கணைகளைக் கொட்டிக்கொண்டேயிருந்தார். ஒவ்வொன்றும் சுடச்சுடக் கிளம்பி, பாரத புத்திரர்களின் திருவிளையாடல்களை ஊருக்குக்காட்டின. கள்ளச்சாராயம் விற்போர்-கடத்தல் தொழிலில் முன் நிற்போர் - ஏமாற்று வித்தையில் தேர்ந்தோர் - யார் யாரென தியாகியின் பேச்சில் தெரியவந்தன. மக்கள் நாற்றம் சகிக்காமல் மூக்கை மூடிக் கொண்டனர். இன்னும் பல உண்மைகள் வெளிப்பட்டால் என்ன ஆகுமோ என்ற திகிலடைந்த நேரு தன் திறமையைக் காட்டினார். கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்த தியாகியைக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் அமைச்சராக்கினார்; அடங்கியது அவர் வாய்.

நேருவின் கொள்கையை விடாது தாக்கி எழுதினார், கராஞ்சியா. அவரைத் தன்னுடன் பிடித்திழுத்துக் கொண்டுபோனார், இரசியாவுக்குச் சென்றபோது. என்ன செய்தாரோ நேரு? இரசியா அறியும்; பிளிட்ஸ் அறியும். அந்தப் பயணத்திற்குப்பின் நேருவின் வெளிநாட்டுக் கொள்கையைத் தலையில் தூக்கி வைத்தாடுகிறார் தோழர் கராஞ்சியா. யாருக்குத் தெரியும் மற்ற உண்மைகள்?

"சேலத்து இரும்பை ஏன் எடுக்கவில்லை? எங்கள் மக்கள் வாழ்வு புதையத்தான் வேண்டுமா? தொழிலுக்கான வாய்ப்புக்கள் இல்லை என்ற வீணான பழிக்கு நாங்களா இரையாவது?" என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் குதியாய்க் குதித்தார். "மாநிலங்கள்" கூட அவரைக் கண்டித்தன. என்ன நடந்தென்ன பயன்? வரி வரியாய் எழுதித் தள்ளிக் கச்சைகட்டியவரை, ஒரே வரியில் அடக்கினார் பண்டிதர். "இன்றுமுதல் நீர் உதவி ரயில்வே மந்திரி!" என்றார் சச்சா நேரு! "அச்சா" கூடச் சொல்லமுடியாமல் அடங்கிப்போனார் அந்த மனிதர். தென்னகத்தை அவர் வஞ்சிக்கவில்லை என்று நேரு திருப்புகழ் வேறு பாடத்தொடங்கிவிட்டார். அந்த விந்தை மனிதர் பெயர் சேலம் எஸ். வி. இராமசாமியாம்.

தென்னகத்தின் அவல நிலைபற்றியும் தில்லியின் ஓரவஞ்சனை பற்றியும் அவலக்கண்ணீர் வடித்தவர் தோழர் கோபால ரெட்டி. ஆந்திராவும் தன் துன்பத்தை வாய்விட்டுச் சொல்கிறதே என்றஞ்சிய நேரு தன் பழைய பாடத்தைக் காட்டினார். பொது மக்களானால் சுட்டுத் தள்ளலாம். எதிர்க் கட்சிக்காரர்கள் என்றால் பதவி வேட்டை என்று சொல்லலாம். உள் கட்சிக்காரனே இப்படிச் சொன்னால்......தில்லிக் கழைத்து ஏதோ சொல்லி வைத்தார். அங்கிருந்து ஊருக்குத் திரும்பிய கோபாலரின் உடை மட்டுமல்ல; உள்ளமும் மாறியது. "பொறுப்பு" வந்துவிட்டதல்லவா?

இந்த வரிசையில் அண்மையில் நடந்திருக்கிற திருவிளையாடல்தான் சஞ்சீவி ரெட்டிக்குக் கிடைத்திருக்கும் "பதவி உயர்வு". பதவி உயர்வைக் கேட்டதும் ஓர் அண்டா கோங்ரா சட்னி தின்ற மகிழ்ச்சியில் குதிக்கிறாராம் அவர்.

"தென்னகம் வஞ்சிக்கப்படுகிறது...!"

"ஐந்தாண்டுத் திட்டம் ஒரு சூதுக் கருவி!"

இன்ன பிற உண்மைகளையெல்லாம் கொட்டிக் கொடுத்தவண்ணம் சுற்றுலா வந்தார். எண்ணரிய உண்மைகளை அள்ளித் தெளித்தார். "சஞ்சீவி ரெட்டியார் காங்கிரசை விட்டு விலகப் போகிறாரோ!" என்று கூடச் சிலர் ஐயுற்றனர். என்ன ஆயினும் அசையாதவர்; கோபாலரைப் புறம் கண்டவர்-என்றெல்லாம் பெருமை படைத்த அவரை நேரு வகையாகப் பழி வாங்கிவிட்டார். "வாயாடியை" எவ்வகை அறுவை மருத்துவமும் இன்றி ஊமையாக்கும் திறமை வாய்ந்த மருத்துவரான நேருவுக்கு இணை யாரே?

போனசு கேட்டவனுக்கு ஐந்து ரூபாய் பிச்சை போட்டு மடக்குவது போல், அழுகிற பிள்ளைக்கு ஒரு வாழைப்பழம் தந்தமர்த்துவதுபோல், கோபக்காரனுக்கு ஒரு பதவியைப் போட்டால் போதும்-இது மா மா (அதாவது பெரிய பெரிய) நேருவின் ஒரு 'டிஸ்கவரி'' போலும்.

இனி, இதே சஞ்சீவியார் சங்கநாதம் முழங்குவார் சிங்கமென, "இந்தியாவில் எவனும் வறுமைக் குளிரால் வாடவில்லை. பாரதமாதா அவ்வளவு பேரையும் ஒரே சேலைக்குள் போர்த்தி வைத்துக் காப்பாற்றுகிறாள்!" என்று. எல்லோரும் எதிர் பாருங்கள். விரைவில் அந்நாளை.

அப்பன் வீட்டுச் சொத்தா?

அப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது. கேரளத்தில் பொதுவுடைமையார் "அதைச் செய்தனர்; இதைச் செய்தனர்!" என்று சொன்ன காங்கிரசார் என்ன செய்தனர் என்று பார்த்தபின், அப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது. எவரும் எந்த ஏழையும் ஏமாற்றப்படாமல் வாழமுடியாது போலிருக்கிறது, இந்த நாட்டில்.

படைகள் பலவகை. அவற்றிலே சில சைபாலால் ஆறும். இன்னொரு படை இருக்கிறது. எதற்கும் மயங்காதது அது. ஆனால் காங்கிரசுக்காரனுக்கு மட்டும் அது நடுங்கும்.

— 12-ம் பக்கம் —

தமிழர் வாழ்விற் காலக்குறிப்பு

கற்காலத்திலோ, பொற்காலத்திலோ செய்யவில்லை. நம் காலத்திலாகிலும் செய்ய வேண்டாமா?

அறிவின் துறைகள் அனைத்தும் நுணுக்கமானவை. அறிவியலாயிருந்தாலும், பூநூலாயிருந்தாலும், மருத்துவமாயிருந்தாலும் நுணுக்கங்களின் வளர்ச்சிக்குத் தகுந்தவாறு அவை இயங்குகின்றன. உலகம் தட்டையாயிருந்தது என்றதிலிருந்து உருண்டையாயிருக்கிறதென்று மெய்ப்பித்தது ஒரு நுணுக்கமே பூமி சூரியனைச் சுற்றி வர 365¼ நாள் ஆகிறது என்று சீசர் காலத்தில் கண்டுபிடித்தனர் என்றால், இது சரியான நேரத்தைவிட 11 நிமிடங்கள் அதிகம் ஆகும் என்று நுணுக்கமாய்க் கண்டார் கிரிகரி என்னும் பேராசிரியர். இவருடைய முறையைப் பின்பற்றித் தான் இன்று உலகில் கால அட்டவணை இருந்து வருகிறது. பல்வேறு விளைவுகளைத் தொகுத்தோ, முன் கூட்டியோ சொல்லக் கணிதமும் காலமும் இணைந்து செல்ல வேண்டியிருக்கிறது. மழை எப்போது மிகுதி, ஆற்றில் புதுப் புனல் எப்போது புரண்டோடும், நில நடுக்கம் எத்துணை நேரம் நீடிக்கிறது, கடலிற் செல்லும் கலத்தின் பாதைக் கான கோணம், என்ன வானவூர்திக்கு வேண்டிய காற்றின் அழுத்த நிலை யாது என்றெல்லாம் கணிதம் வாழ்க்கையிற் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது எனலாம்.

ஆங்கில நாட்டில் ஒரே பெயரில் பல மன்னர்கள் முதலாம் சார்லசு, இரண்டாம் சார்லசு, முதலாம் ஜேம்சு, இரண்டாம் ஜேம்சு முதலாம் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜ் என்று இருந்திருக்கின்றனர். என்றாலும் இவர்கள் ஒவ்வொருவரையும் கருத்துக் குழப்பமின்றித் தனித்துப் பிரிக்கக் காலக் குறிப்புகள் உள்ளன. ஆனால் அதேபோல் தமிழர் நாட்டில் வாழ்ந்த இரண்டு கபிலர்கள், இரண்டு ஔவையார்கள் பல்வேறு மன்னர்களின் வாழ்க்கையெல்லாம் சீர்ப்படுத்த இயலாமலிருக்கின்றன. காரணம் நாம் காலப் பொதுக் குறிப்பை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்பதேயாகும். மற்றும், நாகரிகம், அரசியற் போராட்டங்கள் அனைத்தும் காலக் குறிப்பைத் துணைக்கொண்டுதான் விளக்கப்படுகின்றன. ஒப்பியல் நோக்கிற்கும், கருத்து வளர்ச்சி, முதல் நிலை, வழி நிலை ஆராய்ச்சிகளுக்கும் காலமே ஓர் பொதுக் கண்ணாடியாகும்.

முகமனுக 1229-ல் எருசலேம் கிறித்தவ மக்களுக்கென்று வழங்கப்பட்டது, 1498-ல் கொலம்பஸ் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒரு பகுதியைக் கண்டுபிடித்தார், 1649-ல் சார்லஸ் மன்னன் இங்கிலாந்தில் தலை துண்டிக்கப்பட்டான், 1800-ல் கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் சூரத் நகரைக் கைப்பற்றினர், 1947-ல் இந்தியா விடுதலை பெற்றது என்று பலப்பல நிகழ்ச்சிகள் காலத்தைக் கணக்கிட்டே சொல்லப்படுகின்றன. இதேபோல் வானகோளங்களான கதிரவன், திங்கள், விண்மீன்கள் ஆகியவற்றின் தொலைவு, சுற்று வேகம், முறை எல்லாம் கணக்கெடுக்கப்படுகின்றன. அதையொட்டி இரவு, பகல், பருவகாலம், எல்லாம் அளக்கமுடிகிறது. இத்தகையதொரு காலக்குறிப்பில் ஈடுபடக் கணித அறிவும், வானநூலறிவும் மிக மிகத் தேவை. கணிதம் வளர்ந்த நாடுகளிற்றான் தத்துவமும், சிற்பமும் உயர்ந்து விளங்கமுடியும்; உயர்ந்து விளங்கியிருக்கின்றன. ஏனைய நாடுகள் இவைகளைப் பின்பற்றிப் பயன்படுத்திக்கொள்ளலாமே தவிர, தரமாகச் செயலாற்ற முடியா.

கிரேக்கர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் தண்ணீரை ஒரு குழாயில் ஊற்றி அதன் அளவு மெள்ள மெள்ள நீராவியாய் மாறிக் குறைவதிலிருந்தும், மணற்குவியலை ஏற்படுத்தி அதன் நிழல் நீளும் அல்லது குறுகும் தன்மையைத் தொடர்ந்து கண்டும் ஓரளவு ஒரு நாட் காலத்தைக் கணக்கிட்டிருந்தனர். தத்துவத்திற்கும் கணக்கிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பிளேட்டோ தமது அறையின் வெளியில் கணிதம் தெரியாத கணவான்கள் உள்ளே நுழையவேண்டாம் என்று எழுதிப் போட்டிருந்தாராம். அதேபோல் வால்டேர், இலெபினிசு, டெக்கார்ட்சு போன்றவர்களும், கார்ல்மார்க்சு, பெட்ராண்ட்ரசல், எம். என். ராய் போன்றவர்களும் கணிதம் நன்கறிந்த மேதைகள். அவர்களுடைய எண்ணங்கள் எழுத்துக்கள் எல்லாம் வெண்சங்கொத்த நீர்மையுடையன. சிந்தனையிலே தெளிவு, கற்பனையிலே நுணுக்கம், வாதத்திலே வன்மை, ஆராய்ச்சியிலேயே அறுதி எல்லாம் காண முடிகிறதென்றால், அவர்களுடைய வியத்தகு ஆற்றலுக்குக் கணித அறிவே காரணம் ஆகும். உலகியல் வாழ்க்கையில் இன்று நாம் பயன்படுத்தும் தந்தி, தந்தியில்லாக்கம்பி, வானொலி, திரைப்படம், அறுப்புச் சிகிச்சை, அணைக்கட்டுகள், மின் விளக்கு, அச்சு இயந்திரம், வானவூர்தி, புகைவண்டி ஆய பல நலன்களும் கணித ஆய்வின் விளைவுகள் என்றே சொல்லலாம். கணிதம் கலக்காதது அறிவியலல்ல; வெறும் இயலே. விஞ்ஞானத்திற்கு ஒரே விளக்கம் வெறுஞ்ஞானம் எனப்படும் வார்த்தை வாதத்திற்கு, பல உண்டு. இதைச் சொன்மல்லாட்டம் என்றும் சிலர் குறிப்பதுண்டு. எனினும் இரண்டின் தன்மைகளும் வெவ்வேறு என்பதைக் கருதுங்கால் கணிதமே காலத்தின் தலைவன் எனலாம்.

நிற்க, நந்தமிழ்மொழி மரபிற் சொற்களை உச்சரிப்பதில் சரியாய்க் கணக்கிட்டுக் காலம் குறித்திருக்கிறார்கள். கால், அரை, முக்கால், ஒன்று என்று மாத்திரை பிரித்திருக்கிறார்கள். ஒரு எழுத்தின் மாத்திரை புணரியலுக்கேற்பச் சிற்சில அமயங்களில் மாறும். மகர ஒற்றிற்கு அரை மாத்திரை. போன்ம் என்ற வார்த்தையில் 'ம்' என்பதற்குக் கால் மாத்திரையே. இதேபோல் வெண்பா, ஆசிரியப்பா, கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, உலா, பிள்ளைத்தமிழ், விருத்தம் என்ற பாடல்களுக்கெல்லாம் ஓசை அளவு. சீர் முறை, முடிப்புவகை என்று கணித்துள்ளனர். மற்றும் காலத்தைப் பொறுத்தவரை நாழிகை, பகல், இரவு, பொழுது, விடிவு, அந்தி, திங்கள், ஞாயிறு, கிழமை, நாள், ஆண்டு, இமை, கணம், முன்பனிக் காலம், இளவேனிற்காலம், பின்பனிக் காலம், கோடை, குளிர், வாடை, தென்றல் என்று தனிச் சொற்களாய்த்தான் நம் பழக்கத்திலிருக்கின்றனவேயன்றி முறைப்படுத்தப் பட்டதோர் கால அட்டவணையாயில்லை. தமிழராட்சி, தமிழ் நிலை ஏற்றம் என்னும் இந்நாளிலும் நாம் துஞ்சுதல்கூடாது. முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும் என்றார் வள்ளுவர். "உன்னுடன் பிறந்த சின்னஅக்கா வானவீதி வந்து திரிந்து, தென்னங்கீற்றுப் பொன்னூசலாடி வானும் மண்ணுந் தன்வசங் கொண்டாள்"-என்று மேலை நாட்டார் திறனைப் பார்த்தேனும் நாம் ஏன் தொடரக் கூடாது என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதான். கணித நூலறிவு இருந்ததால் தான் அரேபியர்கள் பிற்காலத்தில் தோன்றிய இசுலாமிய மதத்திற்குத் தனியாய் ஒரு கால அட்டவணை, சொத்து விவரம், எல்லாம் சிறப்பாகச் செய்ய முடிந்தது இதன் துணையால் வான நூல், கோண நூல் (Geometry) யூனானி மருத்துவம், எல்லாம் அங்கே மறு மலர்ச்சி பெற்றன. இவர்களைப் போன்றே ஆரியரும் தமக்கென்று ஒரு முறையைப் பின்பற்றி வந்தனர். சாத்திரம், சாதகம், சோதிடம், ஆருடம் எல்லாம் இயற்கைக் கோளங்களான புதன், சனி, செவ்வாய், இராகு, கேது,

— 11-ம் பக்கம் —

பெங்களூரில் கண்ணதாசன்

15-11-'59 அன்று வெள்ள நிவாரண நிதிக்காக கர்நாடக மாநில தி. மு. க. தோழர்கள், கலைஞர் மு. கருணாநிதியின் தூக்கு மேடை நாடகத்தை நடத்தினர். ஆசிரியர் கண்ணதாசன் தலைமை வகித்தார். அவர்கள் தலைமையுரை ஆற்றுவதையும், தோழர் இரா. செழியனையும், நாடகத்தை ஏற்பாடு செய்த தோழர்களையும், தோழர் பதியையும் படத்தில் காணலாம். இதே நிதிக்காக, தங்கவயலில் நடந்த சிறப்புக்கூட்டத்தில் ஆசிரியர் கண்ணதாசனும் தோழர் இரா. செழியன் எம். ஏ. அவர்களும் பேசினர்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

என்னாம்

மலர் 6 21-11-'59 இதழ் 23

எழுகின்றனர், இந்நாட்டை வாழவைக்க!

எழுந்தது இளங்கதிர்! தொழுதது மனிதகுலம்!

கொதித்தது ஏழை உள்ளம்! வெடித்தது காலப்புரட்சி!

ஆர்த்தது இளைஞரணி! சேர்ந்தது புகழொளி!

சிந்தனை வளர்ந்தது! சிங்க மாணவர் எழுந்தனர்!

சித்திரப் பாவைபோல், "இரு" என இருந்து, "எழு" என எழுந்து மாணவர்கள் பாடம் கேட்டுவந்த காலம் மாறிப்போயிற்று.

"சீடா, உனக்கு இன்னும் பக்குவம் வரவில்லை!" என்று ஆசிரியர்கள் கண்டிப்பதும், "மன்னிக்கவேண்டும், குருநாதா!" என மாணவன் கெஞ்சுவதும் ஆனகாலம் மாறிவிட்டது. ஆசிரியரிடம் மாணவன் அடிமைபோல் பழகிய நாள் போய், அவரும் இவனும் அன்போடு பழகும் நாள் எழுந்துவிட்டது.

அங்கங்கே உள்ள சில நல்லாசிரியர்கள், "ஏன்? எப்படி? எதற்கு? எங்கே?" என்ற கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்து, அவர்களை ஊக்குவிக்கவும், அவர்கள் புதுப்புது அறிவு பெற்று உலகுக்குப் பரப்பவுமான நிலை வளர்ந்துவிட்டது. ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் இடையே உள்ள தொடர்புகள் பெருகியிருக்கின்றன. அவர்களும் இதைத்தான் வரவேற்கின்றனர். அவர்களும் முன்னாளைய மாணவர்கள் தாமே!

வெந்தணலையும் கடுங்கோடையையும் காணப் பொறுக்காத மாணவர் உள்ளம் கிளர்ந்தெழுந்ததால்தான், பல அரிய காட்சிகள் எழுந்திருக்கின்றன. நம்மைப் பொறுத்தமட்டில், நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் மாணவர்களின் நிகழ்காலம் முறையானதாக-சிறப்பானதாக அமைய அன்றும் இன்றும் உழைத்திருக்கிறோம். நம் இயக்க வளர்ச்சியே மாணவரணியின் வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. எனவே மாணவர்களின் ஆற்றலும் தோற்றமும், மாண்பும் புகழும் சிறப்பதற்கான வழி வகைகளை அவ்வப்போது சொல்லியிருக்கிறோம்; வகுத்திருக்கிறோம். இந்த உழைப்பின் அரும்பயனாய், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அழகியதாயும் வலியதாயும் வளர்ந்து வந்திருக்கிறது. தாய்க் கழகத்திற்குப் பல எஃகு இதயங்களை, இரும்புக் கோட்டைகளைத் தந்திருக்கிறது. அவற்றுள் ஒன்றுதான் மதுரை மாணவர் கோட்டை!

கல்விச் செல்வர்கள், கவிதை வல்லவர்கள், நுண்மாண் நுழை புலத்தார், புகழ்பாடும் அறிவுத் திருவினர் ஆய எல்லோரும் வியந்தேத்தும் மதுரை, தமிழ் மகளின் மாளிகை. தேன் மழைப் பாவலர்கள் தீங்குரற், கவிவாணர்கள், கருத்து மணிகள் ஒளிரும் காவியத் தந்தையர், அங்கே உலவியிருக்கின்றனர். அவர்கள் மட்டுமல்ல; வீரஞ் செறிந்த வேலின் தலைவர்களும், வேழம் நிகர்த்த கழற்கால் மறவர்களும் அங்கே உலவியிருக்கின்றனர். தமிழகத்தின் ஒளி மணிகளாய்த் திகழும் பல மணிகளும் அங்கே வாழ்ந்து வளர்ந்து, தம்மோடு மதுரையின் புகழையும் வளர்த்திருக்கின்றனர்.

அந்தப் பாண்டியன் கோட்டையில் நமது கோட்டை! வெற்றிவேந்தன் புனலாடிய வையைக்கரையில் நமது மாணவ மறவர் அணி கூடுகிறது; மகிழத்தக்க சேதி!

வரும் 29-11-'59 அன்று கூடும் மதுரை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாட்டினர்க்கு, பல சிக்கலான பிரச்னைகளை ஆராய வேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. வளர்ந்து வரும் மாணவருலகின் எழுச்சியைத் தடுப்பதற்கோ-ஏனோ, அங்கங்கே சிலர், மாணவர்களின் உரிமைகளைப் பறித்து வருகின்றனர். அவர்களை எதிர்த்து மாணவர்கள் அடிக்கடி, போர் உடற்றி வருகின்றனர். அவற்றின் சில சின்னங்களே, பச்சையப்பன் கல்லூரியிலும் மதுரைக் கல்லூரியிலும் வெடித்தெழுந்த புரட்சிகள். மாணவர்களிடம் வாங்கும் கட்டணத்திற்கேற்றவாறு, வசதிகள் செய்து தரப்படுகின்றனவா என்னின், இல்லை. மாணவர்கள் தங்களுக்கென ஆடம்பர ஏற்பாடுகளைக் கேட்கவுமில்லை. தருவதற்கு அதிகமான வசதிகளையும் எதிர்பார்க்கவுமில்லை. நேர்மையின் அடிப்படையில்தான் தம் குரலை எழுப்பினர். இதைக்கூடச் செய்து தர எடுப்பிலேயே ஒப்புக்கொள்ளவில்லை கல்லூரியை இயக்குவோர். மாணவர்களை மிரட்டியும் வெருட்டியும் பார்த்து, அவற்றிலும் பலனில்லாது போகவே, பின்னர்தான் இதற்கு ஒத்து வந்திருக்கின்றனர். தமது தோல்விகளையும் திறமையாக மறைத்திருக்கின்றனர். போரில் வென்ற அம்மாணவர்கட்கு நம் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

இவர்களைப்போலவே பிற மாணவர்களும் போராடிப் போராடித்தான் தமது உரிமைகளைப் பெற வேண்டுமா? அந்த நிகழ்ச்சி இனியும் எழக்கூடாது. அதற்கான வழி வகைகளை ஆராய்ந்து கூற வேண்டியது மதுரை தி. மா. மு. க. மாநாட்டினர் கடமையாகிறது.

மற்றும் தென்னக மாணவர்களின் பல குறைகளும் அங்காங்கே சுட்டிக் காட்டப்படாமலே பெரிதாகிக்கொண்டிருக்கின்றன. ஆளும் வர்க்கத்தார் கல்வித் துறையைத் தமது பிரச்சாரக் கருவியாகப் பார்க்கின்றனர். அவற்றிற்கும் பதிலளிக்க வேண்டியது மாணவர் மாநாட்டின் கடமையாகிறது.

சொல்லாடும் திறனும் விளக்கிக் கூறும் நுணுக்கமும் உடைய நண்பர் கிருட்டிணசாமி தலைமையேற்கிறார், இம்மாநாட்டிற்கு. மதுரை மாவட்ட நண்பரும் சட்டக் கல்லூரி மாணவருமான பி. எஸ். மணியம் மாநாட்டினைத் திறந்து வைக்கிறார். மேலாக, செயலொன்றே மூச்சாய்க்கொண்ட நண்பரும், தி. மா. மு. க. பொதுச்செயலாளருமான எஸ். டி. சோமசுந்தரம், தனது சீரிய அறிவுரைகளைத் தர விருக்கிறார்.

ஒல்லும் வகை எல்லாம் வெற்றி ஈட்ட வரவேற்புக் குழுத் தலைவர் இந்திரசித்தும் மற்றைய தோழர்களும் முயன்று உழைக்கின்றனர்.

மொத்தத்தில் மதுரை மாவட்ட தி. மா. மு. க. மாநாடு எண்ணரிய வெற்றிகளை ஈட்டி, தென்மாவட்ட மாணவர்களுக்கெல்லாம் புது விருந்து படைக்கவிருக்கிறது. அனைவரும் திரண்டு வாரீர்! அலையெனப் பொங்கி எழுந்தோர், மலையென நிமிர்ந்து நிற்கும் காட்சி காணீர்! காணீர்! ★

மதுரை மாவட்ட

தி. மா. மு. க. முதல் மாநாடு

29-11-'59 அன்று

மதுரை ஏ. வி. எஸ். எஸ். காம்பவுண்டில் உள்ள சண்முகனார் பந்தலில் தருமாம்பாள் அரங்கில் நிகழும்.

தலைவர்:

கே. ஏ. கிருட்டிணசாமி

பி. ஏ. (ஆனர்ஸ்), (பி. எல்.)

திறப்பாளர்:

பி. எஸ். மணியம்

பி. ஏ., (பி. எல்.)

தி. மா. மு. க. பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம், எம். எஸ். வெங்கடாசலம் எம். ஏ., கணபதி எம். ஏ., இரா. வெங்கடேசன் எம். ஏ., வி. அருணாசலம் பி. ஏ., எம். பச்சைமுத்து எம். ஏ. உள்பட பல மாணவர் பேசுவர்.

அனைவரும் திரள்க.

கு. இந்திரசித்து,
வ. கு. தலைவர்.

நன்கொடை: 5, 3, 2, 1, 0-50.

கொதித்தெழுந்த மக்கள்....

''ளிச்! பளிச்! என பிரசல்சு நகரின் தெருச் சுவர்களிலே மேற்கண்ட வாக்கியங்கள் மின்னிக்கொண்டிருந்தன. அதிகாலையில் எழுந்து வெளியே வந்த மக்களின் இதழோரங்களிலே பொருள் பொதிந்த புன்னகைகள் மிளிர்ந்தன. விழிகள் சாடை பேசின. செய்திகள் அங்கும் இங்கும் காற்றுப் பறந்தன. டச்சு அதிகார வர்க்கம் கலக்கமடைந்தது. பெல்சிய மக்களோ புதியதொரு உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும் பெற்றவர்களாக உலவினர்.

தெருச் சுவர்களை அலங்கரித்துக் கொண்டிருந்த இந்த வாக்கியங்களின் பொருள் என்ன? புரியாது திகைத்தது அதிகார வர்க்கம்.

அவர்கள் புரிந்துகொண்டால்தான் என்ன? புரியாமல் திகைத்தால்தான் என்ன? இதைப் புரிந்துகொள்ள வேண்டியவர்கள் புரிந்துகொண்டார்கள். இனி என்ன செய்ய வேண்டும் என்பதையும் முடிவு செய்துகொண்டார்கள்.

ஆம்! ஆண்டு தோறும் ஆகஸ்டு திங்கள் 24-ல் ஆளப் பிறந்த டச்சு மாமன்னன் வில்லியத்தின் பிறந்த நாள் விழா நாடெங்கும் கொண்டாடப்பட்டு வந்தது. ஆட்கொள்ள வந்த அரசன் பிறந்த திருநாளை கொண்டாட வேண்டுமென அடிமை மக்கள் கட்டாயப்படுத்தப்படுவது உலக இயல்புதானே. அந்த முறையில் பெல்சியமும் ஆண்டு தோறும் பேரரசனின் பிறந்த நாளை வாண வேடிக்கையுடனும் விளக்கு வரிசையுடனும் கொண்டாடி வந்தது. ஆனால் இந்தத் தடவை இவ்விழாவில் பெல்சிய மக்கள் உற்சாகமாகப் பங்கு பெறவில்லை. அடிமை வாழ்வை எண்ணிக் குமுறிக்கொண்டிருப்போரிடையே உற்சாகம் எப்படித் தோன்றும்? அந்தக் குமுறல் கிளர்ச்சியாக உருவெடுக்கத் தொடங்கியது. கிளர்ச்சி புரட்சியாக மாறப் போகிறது என்பதை பிரசல்சு நகரத் தெருச் சுவர்கள் பறையறைந்து தெரிவித்துக் கொண்டிருந்தன.

ஆலந்துடன் இணைக்கப்பட்டு அதன் பகுதியாக விளங்கிய பெல்சியம் பிரிக்கப்பட வேண்டும். அப்படிப் பிரிந்து தனி நாடு அமைந்தால்தான் டச்சுச் சுரண்டல் ஒழியும்; பெல்சிய மக்கள் நல் வாழ்வு பெறுவர் என்ற உண்மை வெகு விரைவாகப் பரவத் தொடங்கியது. உணவு விடுதிகளிலும், உறைவிடங்களிலும், நாற்சந்திகளிலும், நாடக அரங்கங்களிலும் பிரிவினை பிரச்சாரம் இடைவிடாமல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாளுக்கு நாள் தனி நாடு கேட்போரின் எண்ணிக்கை பெருகியது. அவர்களது முழக்கம் ஓங்கியது. ஏன் இத்தகைய பிரிவினை முழக்கம் எழுந்தது? நாட்டைப் பிரிப்பது அடுக்குமா? டச்சுக்காரர்களும் பெல்ஜியர்களும் இனத்தால் முற்றிலும் வேறுபட்டவர்கள் அல்லவே. பெல்சியத்து மக்களின் ஒரு பகுதியினருக்கு டச்சு மொழியே தாய் மொழியாக விளங்கியதே. அப்படி இருக்கும்போது அவர்கள் ஏன் பிரிந்து செல்ல விரும்பினர் என்ற ஐயம் பாரத புத்திரர்களுக்கு ஏற்படுவது இயற்கை. பிரிவினை என்றாலே பதைக்கும் பாரத ப[illegible]ளே!

வரலாற்றின் ஏடுகளைச் சற்றுப் புரட்டிப் பாருங்கள்.

★

ஐரோப்பியக் கண்டத்திலே பிரான்சிற்கும் ஆலந்திற்கும் நடுவே பெல்சியம் அமைந்துள்ளது. இந்தச் சின்னஞ்சிறு நாட்டின் பரப்பளவு 11,775 சதுரக் கற்கள் ஆகும். அதாவது திராவிட நாட்டின் பரப்பளவில் இருபத்தொன்றில் ஒரு பாகத்திற்கும் குறைவானதாகும். மக்கள் தொகை 86 25084 ஆகும். அதாவது திராவிடத்தின் மக்கள் தொகையில் பதினொன்றில் ஒரு பாகத்திற்கும் குறைவானதாகும். நாட்டுமக்களின் தாய்மொழிகளாக பிரஞ்சு, ஃபிளமிசு ஆகிய இரண்டும் விளங்குகின்றன. இதிலே குறிப்பிடத் தக்கதொரு புதுமை என்னவென்றால் பெல்சியம் இனம் என்றொரு தனி இனம் கிடையாது. வரலாற்றுப் பேராசிரியரான Carlton J. H. Hayes என்பார் எழுதியுள்ள 'நவீன ஐரோப்பாவின் அரசியல்-நாகரிக வரலாறு'' என்னும் நூலின் இரண்டாம பகுதியில் 435-ம் பக்கத்தில பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"A second peculiarity of Belgiam was the absence of an Belgian nationaiity in the correct sense of this term. There was no Belgian nationality as there was French nationality in France or an Italian nationality in Italy. Approximately half of the Belgians those inthe Northern sections of the Country spoke Netherlandish or Dutch. (It was called Flemish in Belgium) While the other half known as 'Walloons' in the Southern sections spoke French. Yet despite the fact that in speech and nationality Belgium was only half 'Latin.' "

"இனம் என்ற சொல்லின் முழுப் பொருளையும் கொண்டு நோககும் போது பெல்சிய தேசிய இனம் என்று ஒன்று கிடையாது. பிரான்சில் உள்ள பிரஞ்சு இனத்தைப்போல, இத்தாலியில் உள்ள இத்தாலிய இனத்தைப் போல தனித்த இனமாக பெல்சிய இனம் விளங்கவில்லை. நாட்டில் வடக்குப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் டச்சு மொழியையும் (ஃபிளமிசு) தெற்குப் பகுதியில் வாழ்ந்த வாலூன்கள் பிரஞ்சு மொழியையும் பேசி வந்தனர். எனவே மொழியடிப்படையிலும், இன அடிப்படையிலும் நோக்கும்போது பெல்சியம் அரை 'இலத்தீன்' இனமாகவே கருதப்பட்டது''

- ஆலந்துடனும் பிரான்சுடனும் பெல்சியர்கள் இனஉறவின்மூலம் பிணிக்கப்பட்டிருந்தனர்.

என்றாலும் டச்சுக்காரர்களுக்கும் தங்களுக்கும் வேறுபாடு இருப்பதாக அவர்கள் கருதினர். எனவே தனி நாடாக வாழ விரும்பினர். பெல்சியர்களும் டச்சுக்காரர்களும் மதத்தால் வேறுபட்டிருந்தனர். முன்னவர்கள் கத்தோலிக்க மதத்தைப் பெரும்பாலும் தழுவியிருந்தனர். பின்னவர்கள் மறுப்பு (புராட்டஸ்டண்ட்) மதத்தவர்களாக விளங்கினர். மொழியாலும்வேறுபட்டிருப்பதாக அவர்கள் எண்ணினர். டச்சு மொழியினின்றும் ஃபிளமிசு மொழி மாறுபட்டிருப்பதாகக் கருதினர். டச்சு மக்கள பெரும்பாலும் உழவையும் வணிகத்தையும் நம்பி வாழ்ந்தனர். ஆனால் இதற்கு முற்றிலும் எதிர்மாறாக பெல்சியம் தொழில் நாடக விளங்கியது. ஆலந்து பிரான்சைப் பகைத்தே வாழ்ந்தது. பெல்சியர்களோ பிரான்சுடன் நேச உறவுகொண்டு வாழ்ந்தனர். இயற்கையாகவே இருநாடுகளுக்குமிடையே இவ்வளவு வேறுபாடுகள் இருந்தன

...சுவரிலே தெரிந்த இந்தத் தொடர்களுக்கு அவ்வளவு ஆற்றலா?...

அப்படி இருந்தும், நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு இலண்டனில் கூடிய வல்லரசுகள் பெல்சியத்தை ஆலந்துடன் இணைக்கத் தீர்மானித்தன. 1814-ம் ஆண்டு சூன் திங்கள் 26-ம் நாள் பெல்சியம் ஆலந்தின் ஒரு பகுதியாக மாறியது. ஆலந்தின் மன்னனுன வில்லியம் பெல்சியத்திற்கும் மன்னனுனன். வியன்னுவில் நடைபெற்ற ஐரோப்பிய வல்லரசுகள் மாநாடும் இப முடிவினை ஏற்றுக்கொண்டு, ஆலந்தின் ஒரு பகுதியே பெல்சியம் என உறுதி செய்தது. பெல்சிய மக்களைச் சற்றும் கலந்தாலோசியாது இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. தேரை வாய்க்குத்தப்பி பாம்பின் வாயில் சிக்கினுற போல பெல்சியத்தின் நிலை ஆனது. பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பெல்சியம், டச்சு ஆதிக்கத்திற்கு அடிமைப் பட்டது. பாரிசு நகரிலிருந்து ஆளப் பட்டுவந்த பெல்சியர், ஹேக் நகரிலிருந்து ஆளப்பட்டனர். ஆண்டைகள் மாறினர். அடிமைநிலை நீடித்தது. வெள்ளையர் ஆட்சியிலிருந்து விடுபட்ட திராவிடம் எங்ஙனம் வடவர் பிடியில் சிக்குண்டு சீரழிகிறதோ அதைப்போல சின்னஞ்சிறு நாடான பெல்சியமும் சீரழிந்தது.

ஆலந்தின் மன்னனுன வில்லியம் தனது ஏதேச்சாதிகார ஆட்சியால் மேலும் சீர்குலைவை நிலவச்செய்தான். 1815-ம் ஆண்டு பெல்சியத்திற்காகப் புதிய அரசியல் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தான். ஆனால் பெல்சிய மக்களோ அதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். பெல்சிய சட்டசபை(Assembly of Belgiam notables) அதை ஏற்கவில்லை. மொத்தமாக 1603 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் 527 வாக்குகளே அரசியல் சட்டத்திற்கு ஆதரவாகப் பதிவாயின. 1076 உறுப்பினர்கள் அதை எதிர்த்து வாக்களித்தனர். இந்த முடிவைக் கேட்டு டச்சு அரசாங்கம் வெகுண்டது. பெல்சிய மக்கள் மன்றம் செய்த முடிவைத் துச்சமாக மதித்து உதறித் தள்ளிவிட்டுப் புதிய அரசியல் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது.

இதைக் கண்ட பெல்சிய மக்களின் உள்ளம் குமுறியது. இதைத் தொடர்ந்து அடுக்கடுக்கான கொடுமைகளை டச்சு ஆதிபத்யம் புரிந்தது. பெல்சியத்தின் மக்கள் தொகை 25 இலட்சமாகவும் ஆலந்தின் மக்கள் தொகை 20 இலட்சமாகவும் இருந்த போதிலும் தேசிய சட்ட சபையில் ஆலந்து பெற்றிருந்த இடங்களின் அளவே பெல்சியத்திற்கும் அளிக்கப்பட்டிருந்தது. இந்த ஓரவஞ்சனையைக் கண்டு பெல்சியம் கொதிப்படைந்தது.

அடுத்து டச்சு ஆதிபத்யம் மேற்கொண்ட நடவடிக்கையைக் கண்டு பெல்சிய நாடே கிளர்ந்தெழுந்தது, நாட்டின் தாய்மொழிகளான ஃபிளமிசு, பிரஞ்சு ஆகியவற்றிற்கு அரியாசனம் ஏறும் உரிமை மறுக்கப்பட்டது. ஆட்சி மொழியாக அன்னியமொழியான டச்சு ஆக்கப்பட்டது. இதைக் கண்டு அதிகாரிகளும், வழக்கறிஞர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் கொதித்தெழுந்து கண்டனக் கணைகளைத் தொடுத்தனர். அவர்களது எதிர்ப்பை டச்சு அரசாங்கம் அலட்சியம் செய்தது.

அரசியல் உயர்பதவிகளும் நியாயமற்ற முறையில் அளிக்கப்பட்டன. படை நியமனங்கள், அரசாங்க உயர் பதவிகள், தூதர் பதவிகள் போன்ற முக்கியமான பதவிகள் யாவும் டச்சுக்காரர்களுக்கே வழங்கப்பட்டு வந்தன. எடுபிடி வேலைகளும் தாழ்ந்த பதவிகளும் பெல்சியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தன.

உழவர்களுக்கு வரிச்சுமை அதிகரிக்கப்பட்டது. இதன் விளைவாக பெல்சிய உழவு நலியத் தொடங்கியது. ஆலந்து-பெல்சிய நாடுகளுக்கிடையே இருந்த வணிகத் தடைகள் நீக்கப்பட்டன. மிகத் தந்திரமாகப் புகுத்தப்பட்ட இம் முறையால் பெல்சிய வணிகம் சீர்குலைந்தது. டச்சு வணிகர்களுக்கு அதிகச் சலுகைகள் வழங்கப்பட்டன. இதன் விளைவாக நாட்டின் வணிகம் டச்சுக்காரர்களின் கையில் சிக்கியது. பெல்சிய நாட்டின் பொருளாதாரத்தை ஆட்டிப் படைக்கும் சூத்திரதாரிகளாக டச்சு வணிகர்கள் விளங்கினர். பெல்சியர்கள் பொருளாதாரத் துறையில் தங்கு தடையின்றிச் சுரண்டப்பட்டனர். நாட்டில் டச்சு வெறுப்புணர்ச்சி வளர்ந்தது.

— அடுத்த பக்கம் —

— முன் பக்கத் தொடர்ச்சி —

பெல்சியத்தில் அன்று நிலவியிருந்த உணர்ச்சியைப்பற்றி பிரஞ்சு அரசியல் தூதுவர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"The Belgian hates the Dutchman, and the latter despises the Belgian to whom he considers himself infinitely superior."

பெல்சியன் டச்சுக்காரனை வெறுத்தான். ஆனால் அவனோ பெல்சியனை விட உயர்ந்தவனாகத் தன்னைக் கருதினான். இந்த நிலையில் இருவரும் எங்ஙனம் ஒன்றுபட்டு வாழமுடியும் எனவே நாட்டில் சிறு சிறு கிளர்ச்சிகள் ஆங்காங்கே தோன்றின. 1828-ல் கத்தோலிக்கர்களும் மிதவாதிகளும் இணைந்து ஒரு புதிய கட்சியை உருவாக்கினார்கள். பத்திரிகைகள் மூலமும், மனுக்கள் அனுப்புவதன் மூலமும் சில சலுகைகளை வழங்கும்படி டச்சு மன்னனை வேண்டிக்கொண்டார்கள். பிற்போக்குத் தன்மையும், மிதவாதமும் நிறைந்த இந்த வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க மன்னன் மறுத்தான். ஆதிபத்ய உணர்ச்சி அவனைத் தடுத்தது. 'ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்'' என்பதைப் போல மேலும் மேலும் பெல்சியர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. டச்சு மன்னன் அப்போது நடந்து கொண்ட முறைகளைப்பற்றி வரலாற்று ஆசிரியரான Carlton J. H. Hayes பின்வருமாறு கூறுகிறார்:

"He outraged their patriotism by imposing upon them Dutch law, Dutch language, and Dutch officials. He irritated Catholics by placing education under the control of Protestant Inspectors He alienated liberals by restricting the freedom of Press. He angered the businessmen by forcing them to contribute a disproportionately large amount of taxes towards the interest on the heavy Dutch Debt."

டச்சு சட்டங்கள், டச்சு அதிகாரிகள், டச்சு மொழி இவைகளைப் புகுத்தியதின் மூலம் பெல்சிய மக்களை தேசபக்தவெறி கொண்டெழச் செய்தான். கத்தோலிக்கக் கல்வி நிலையங்களை, புராட்டஸ்டண்டு அதிகாரிகளின் ஆணைக்குட்படுத்தியதன் மூலம் கத்தோலிக்கர்களின் சினத்தைக் கொழுந்துவிட்டெரியச் செய்தான். டச்சு நாடு பெற்றிருந்த பெருங் கடனின் வட்டியை அடைப்பதற்காக பெல்சிய வணிகர்களுக்கு வரிச் சுமையை அதிகரித்து அவர்களைக் கொதித்தெழச் செய்தான். இவற்றின் விளைவாகப் பிரிவினை உணர்ச்சி நாடெங்கும் வெள்ளமெனப் பரவியது. பெல்சியம் தனி நாடாகப் பிரிந்தால் ஒழிய சுரண்டலில் இருந்து விடுபடமுடியாது என்பதை பெல்சிய மக்கள் உணர்ந்துகொண்டனர். பிரிவினை இயக்கமொன்று உருவெடுத்தது. இளைஞர்கள் வீறு கொண்டெழுந்து விடுதலை இயக்கத்திலே ஏராளமாகச் சேர்ந்தனர். மேலும் உற்சாகமூட்டுவதைப்போன்ற செய்தி ஒன்று விரைந்தோடி வந்து அவர்களது செவிகளிலே தேனோடை எனப் பாய்ந்து சிந்தையைக் குளிர்வித்தது.

பாரிசு நகரிலே கொடுங்கோலனை எதிர்த்துப் பாமரர்கள் போர்க்கோலம் பூண்டுவிட்டனர். பிரஞ்சு நாட்டிலே புரட்சி பூத்துக் குலுங்கிவிட்டது என்ற செய்தி காட்டுத் தீ என அண்டை நாடான பெல்சியத்தில் பரவியது. இதைத் தொடர்ந்து இரகசியப் புரட்சி இயக்கமொன்று உருவெடுத்தது நெப்போலியனின் படைகளில் இருந்து பயிற்சி பெற்ற சிலர் இவ்விடுதலை இயக்கத்திற்குத் தலைமை தாங்கினார்கள். ரோசியர், லூயிஸ்-டி-பீட்டர், அலெக்சாண்டர், செனிடிபியன், சூவான் வான் ஆலன், மெலின்ட், டி போட்டர் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார்கள்.

இங்ஙனம் விடுதலைப் புரட்சிக்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே, மேலும் அதைத் தூண்டிவிடக்கூடிய சில செயல்களை டச்சு அரசாங்கம் செய்தது. பெல்சிய உயர் நீதிமன்றம் ஆலந்தின் தலைநகரான ''ஹேக்''கிற்கு மாற்றப்பட்டது. டச்சுக்காரரான வான்மானென் என்பவர் பெல்சிய ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த இரு நடவடிக்கைகளும் பெல்சிய மக்களிடையில் ஆத்திரத்தை யூட்டின. டச்சு ஆதிக்க வெறியை மக்கள் வன்மையாகக் கண்டித்தனர். பிரான்சில் இருந்து வரும் பத்திரிகைகள் மூலம் பிரஞ்சுப் புரட்சிபற்றிய செய்திகளை மக்கள் அவ்வப்போது அறிந்தனர். உற்சாகமிக்க அச்செய்திகள் அவர்களிடையேவிடுதலையுணர்ச்சியை யூட்டின.

இதைக் கண்டு அஞ்சிய டச்சு அரசாங்கம் பிரிவினைக் கிளர்ச்சியின் தலைவரான லூயிஸ்-டி-பீட்டரையும் அவரது நெருங்கிய தோழர்களையும் நாடு கடத்தியது. அவர்கள் நேராகப் பாரிசு நகருக்குச் சென்று பிரஞ்சுப் புரட்சி அரசாங்கத்தினிடம் உதவி வேண்டினார்கள். வேண்டிய துணை புரிவதாகப் பிரஞ்சு அரசாங்கமும் வாக்களித்தது.

மாபெரும் புரட்சியொன்றை உருவாக்குவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதில் இந்தத் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். எதிர்பார்த்ததற்கு மேலாகக் காரியங்கள் விரைவாக நடைபெற்றன. ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மன்னனின் பிறந்த நாளான ஆகஸ்டு 24-ம் நாளையே புரட்சி நடத்த வேண்டிய திருநாளாகப் புரட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுத்தனர். நாடெங்கணும் இளைஞர் பட்டாளங்கள் தயாராயின. கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டபடி பிரசல்சு நகரின் தெருச்சுவர்களில் இரவோடு இரவாகப் புரட்சி வாக்கியங்கள் எழுதப்பட்டன. நாடெங்கணும் இருந்து வீறு கொண்ட இளைஞர்கள் பிரசல்சு நகரில் வந்து குழுமிய வண்ணம் இருந்தனர்.

டச்சு கவர்னருக்கு இச்செய்திகள் எட்டின. அரசாங்கம் விழிப்படைந்தது. பருவநிலை சரியில்லை என்ற காரணத்தைக் காட்டி மன்னனின் பிறந்தநாள் விழா ஏற்பாடுகளை நீக்க செய்தது. வேண்டிய அளவு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது;டச்சுப்படைகள் பிரசல்சு நகரில் குவிக்கப்பட்டன. புரட்சிக்காரர்களும் தயாராகிக்கொண்டிருந்தனர். பாரிசில் இருந்து வந்திருந்த சிலர் ஆங்காங்கே மக்களைக் கூட்டி, பெல்சிய விடுதலை இயக்கத்திற்கு உறுதுணை புரிய பிரஞ்சுப் புரட்சி அரசாங்கம் தயாராக உள்ளது எனக் கூறினர். நடைபாதைகளிலும், நாற்சந்திகளிலும், உணவு விடுதிகளிலும், ஓய்விடங்களிலும் இப்பிரச்சாரம் பலமாகத் தொடர்ந்து நடைபெற்றது தொழிலாளர்களும் மாணவர்களும் பெல்சிய தேசியச் சின்னங்களை அணிந்துகொண்டு வீதிகளிலே உலவியதைக் கண்டு அரசாங்க அதிகாரிகள் அஞ்சினர்.

வடக்கு வாழவில்லையா ?



வடக்கு வாழ்கிறது என்பதற்கு மற்றொரு சான்று சம்பல் பள்ளத் தாக்குத் திட்டம். இத்திட்டத்தின் ஒரு பிரிவு கோத்தாக் கால்வாய். இதனால் மத்தியப் பிரதேசமும் இராசத்தானும் அளவிறந்த பயன் அடைய இருக்கின்றன. வேலை முடிந்ததும், இதன்மூலம் 14 இலட்சம் ஏக்கர் கழனிகள் நீர் பெறும். மற்றும் 2,10,000 கிலோவாட் மின்னாற்றலும் கிடைக்கும். அம்மின்னாற்றலால் பல புதுத் தொழிற்சாலைகள் உருவாக்கப்படும்.

இப்போது சொல்லுங்கள், வடக்கு வாழ்கிறதா ? இல்லையா ? என்று.

அன்று மாலையில் பிரசல்சு நகரின் நாடகக் கொட்டகையொன்றில் Muette - de - Portici என்னும் நாடகமொன்று நடைபெறுவதாக இருந்தது. பாரிசு நகரில் மிகுந்த வெற்றியுடன் நடைபெற்ற அந்நாடகம் முதன் முறையாக பிரசல்சில் அரங்கேறுவதாக இருந்தது. அமால்பி என்னும் இடத்தைச் சேர்ந்த செம்படவனான மாசனியோ என்பவன் ஸ்பானிய ஆட்சியை எதிர்த்துப் புரட்சி நடத்தி நேபிள்சை விடுவித்த வீரஞ்செறிந்த வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு அந்த நாடகம் நடிக்கப்பட்டது. பெல்சிய மக்களின் விடுதலை உணர்ச்சியை இந்நாடகம் தூண்டி விடும் என அதிகாரிகள் நம்பினர். எனவே நாடகக்கொட்டகையினுள்ளும் வெளியேயும் ஏராளமான போலீசாரை மாறுவேடத்தில் நிற்க வைத்தனர். "Marseillaise" என்னும் பெல்சியத் தேசிய பாடலை நாடகத்தின் எந்தக் கட்டத்திலும் பாடக்கூடாது எனத் தடைவிதித்தனர்

மாலையில் நாடகம் தொடங்குவதற்குமுன்பு கொட்டகையின் வாயிலில் பெல்சிய விடுதலை இயக்கத் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன. ஆலந்தின் அடிமை நாடாக பெல்சியம் விளங்கத் தேவையில்லை. டச்சுக்காரர்கள் நம்மை ஆண்டது போதும். இனி நம்மைநாமே ஆளத்தொடங்குவோம். நமது விடுதலை இயக்கத்திற்கு உற்ற நண்பர்களாகப் பிரஞ்சுக்காரர்கள் விளங்குவார்கள். வெற்றி நமதே என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நாடகம் விறுவிறுப்புடன் தொடங்கி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அரசாங்கத் தடையை மீறி புரட்சிப் பாடல்கள் புத்துணர்ச்சியுடன் பாடப்பெற்றன. கூடியிருந்தவர்கள் பெரும் ஆரவாரத்துடனும் உற்சாகத்துடனும் அவற்றை வரவேற்றனர். ஸ்பானிய ஆட்சியின் கொடுமையிலிருந்து விடுபட வாரீர் எனப் புரட்சிக்கு மக்களை அழைக்கும் புரட்சிப் பாடல் பாடப்பட்டபோது கூடியிருந்தோர் தங்களை மறந்தனர். டச்சு ஆதிக்கம் ஒழிக என்ற பெருமுழக்கம் எழுந்தது. அந்த விநாடியே பெல்சிய விடுதலைப் புரட்சி எழுந்தது.

வெறிகொண்ட நிலையில் மக்கள் வெளியே ஓடினர். வெளியில் காத்துக் கிடந்த பெருங் கூட்டமும் அவர்களுடன் சேர்ந்துகொண்டது. அரசாங்க ஆயுதக் கிடங்குகள் சூறையாடப்பட்டன. ஆயுதங்கள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. புரட்சி இயக்கத்தை இளைஞர்களே முன்னின்று நடத்தினர். போலீசுப் படையினர் தலைதெறிக்கப் பின்வாங்கி ஓடும் அளவிற்கு விடுதலைப் படையினர் வீரத்துடன் போராடினர்.

(அடுத்த இதழில் முடியும்)

பகையை மிதித்தழித்த கதை

சிறு கற்பனை நாடகம் :

காலம் : நிகழ்காலம்.
இடம் : விஜயகமூர்த்தி வீடு—சென்னை.
பாத்திரங்கள் : **விஜயகமூர்த்தி** — கௌரவத்தைக் கஷ்டப்பட்டுத் தேடி வைத்திருக்கும் மனிதர்
வீரபாண்டியன் — அண்ணன் சொற் கடவாத அவர் தம்பி.
முத்தையா பிள்ளை — இவர்கள் தகப்பனார். முன்கோபக்காரர்.
கமலா — விஜயகமூர்த்தியின் தங்கை.
கண்மணி — மேற்படியார் மனைவி.

காட்சி 1.

சென்னை நகரத்தில் புதிதாக எழுந்தருளியிருக்கும் ஒரு பகுதி. அதில் திடீரென்று முளைத்துவிட்ட வீடுகள் சில, அடுக்கிவைக்கப்பட்ட மல்லிகைப் பூக்களைப்போலக் கோர்வையாக அமைந்திருக்கின்றன. அவற்றில் கடைசி வீடு, தோற்றத்தில் மற்றவற்றைப்போல் இருந்தாலும், வேறு ஏதோ காரணத்தால் வித்தியாசப்படுவதுபோல தனித்து நிற்கிறது. அதன் வாசலின் ஒரு பக்கத்தில் **'டாக்டர் விஜயகமூர்த்தி'** என்ற எழுத்துக்களுள்ள பலகையும், மற்றொருபக்கத்தில் **'நாய் ஜாக்கிரதை'** என்ற எழுத்துக்களுள்ள பலகையும் தெருப்புழுதியைத் தாங்கியவண்ணம் மக்கி, மறைந்து தோற்றம் தருகின்றன. அவற்றைப் பார்த்துக்கொண்டு பரபரப்புடன் வருகிறார் **முத்தையா பிள்ளை**. ஐம்பது, அறுபதுக்கு மேற்பட்ட வயது. சுருக்கமாகச் சொன்னால் 'ரிட்டயர்டு ஸ்டேஜ்'.

வெளிக்கதவைத் தள்ளிவிட்டு உள்ளே நுழைகிறார் பிள்ளை.

உள்ளே தாழ்வாரத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார் **விஜயகமூர்த்தி**. அவர் அருகில் அவரைப்போலவே கொழுத்த தோற்றமுடைய நாய் ஒன்று. வாலை ஆட்டியபடி படுத்துக் கிடக்கிறது. அவருக்கு எதிரில் உள்ள நாற்காலியில அவருடைய தம்பி **வீரபாண்டியன்** ஏதோ 'மெஞ்ஞான'ப் புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண்டிருக்கிறான்.

வீட்டிற்குள் நுழையும் முத்தையா பிள்ளையை இருவரும் ஒரே நேரத்தில் பார்க்கிறார்கள்.

விஜயகமூர்த்தி : வாங்க'ப்பா, வாங்க! என்ன இப்படி அவசரமாப் புறப்பட்டு வந்திட்டீங்க! முன்னாலே கடுதாசி எழுதியிருந்தா நாங்களே ஸ்டேஷனுக்கு வந்திருக்கமாட்டோமா ?

பிள்ளை : என்னவோ என் போதாத காலம், யாரைச் சொல்லி என்ன பண்ண ?! ஆனா நான் வர்ரதா நேற்றே தந்தி குடுத்திருந்தேனே, கிடைக்கலியா ?

இருவரும் : தந்தியா ?

('அவர் ஏன் தந்திகொடுக்க வேண்டும்–கடிதம் எழுதுவதற்கே காசு போகிறதென்று அழுவாரே'–என்று, வியப்போடு ஒருவரையொருவர் பார்க்கிறார்கள்.)

பிள்ளை : ஆமாப்பா...நேற்றே தந்தி குடுத்தேன் – உன் 'ஆஸ்பத்திரி அட்ரசு'க்கு. ஒருவேளை அங்கே வந்து கெடக்கோ என்னவோ !

விஜ : பரவாயில்லைப்'பா. உட்காருங்க. (உள்ளே திரும்பி) ஏய், கண்மணி ! இங்கே யார் வந்திருக்கா பார்த்தியா ?

(வீட்டிற்குள்ளிருந்து **கண்மணி**– விஜயகமூர்த்தியின் மனைவி – வருகிறாள். நல்ல கனமான உருவம். கணவனைவிட வயதில்மூத்திருப்பாளோ என்பது போன்ற பிரமை தரும் தோற்றம்.

வந்தவள், பிள்ளையை வணங்கிக்கொண்டே...)

கண்மணி : வணக்கம், மாமா ! சௌக்கியந்தானே ? வீட்டில் அத்தை, நாத்தனார்......

பிள்ளை : சௌக்கியந்தான், சௌக்கியந்தான். அதுக்கென்ன கொறச்சல் ! அந்த உன் நாத்தனார் 'எழவு'க்குத்தான் இப்ப வந்திருக்கேன் !

கண் : நாத்தனார் 'எழவு'க்கா ? என்ன சொல்றீங்க மாமா ? நம்ம கமலாவுக்கு என்ன ?

விஜ&வீர : (பரபரப்புடன்) தங்கச்சிக்கு என்னப்பா ?

பிள்ளை : ஏதாவது வந்துட்டாத்தான் பரவாயில்லையே; நிம்மதியா ஒரு பெருமூச்சு விட்டுட்டு உட்கார்ந்திருப்பேனே !...

விஜ : அப்படின்னா என்னப்பா ? எனக்கு ஒண்ணுமே விளங்கலியே !

பிள்ளை : எனக்குந்தான் ஏழு வருஷமா வெளங்கலை. இப்பத்தான் அந்தப் பயபுள்ளையோட வெவகாரமெல்லாம் தெரியுது !

விஜ : விஷயத்தைச் சொல்லுங்கப்பா !

பிள்ளை : ஒனக்கு பூபதியைத் தெரியுமில்லே ?

விஜ : ஏன் தெரியாது; நம்ம ரெண்டு பேருக்குள்ளே நடந்த சண்டையைத் தீர்த்து வச்சவரே அவர்தானே !

வீர : ரொம்ப நல்லவர். பொறுப்புத் தெரிஞ்ச மனுஷன்கூட. அறிவு, அடக்கம் எல்லாம் உண்டு. அவர் கிட்ட. நம்ம அம்மாவுக்குக்கூட அவரை ரொம்பப் புடிக்குமே !

பிள்ளை : அம்மாவுக்கு ரொம்பப் புடிக்கும்!...ஹூம்; அம்மாவுக்குப் புடிச்சதோட நிண்ணிருந்தாப் பாதகமில்லையே; உன் தங்கச்சிக்கும் கூடயில்ல அவனைப் புடுச்சிக்கிட்டுது.

விஜ : என்னப்பா, என்ன சொல்றீங்க ?

பிள்ளை : என்னத்தைச் சொல்றது... இந்தா; இதைப் படிச்சுப் பாரு !

(என்று ஒரு (கடித)உறையைத் தருகிறார். அதில் ஒரு கடிதமும், திருமண அழைப்பிதழ் ஒன்றும் இருக்கின்றன. அதைப் படித்து விட்டு.)

விஜ : இது என்ன அநியாயம் ! நம்மகிட்டக் கேட்காம நம்ம தங்கச்சி இப்படி நாடகம் போட்டிருக்காளே ! இவளைச் சும்மாவிடக் கூடாது !

கண் : என்னங்க இப்படி அவசரப் படுறீங்க... இங்க கொடுங்க அதை !

(என்று கணவனிடம் அதை வாங்குகிறாள். அவளும படிக்கிறாள்.)

கண் : இப்ப என்னங்க கெட்டுப் போச்சு ! 'ஏழு வருஷமா எங்களுக்குள்ள பழக்கம் இருக்கு. நீங்களா எங்க கல்யாணத்தை நடத்துறதாக் காணோம். அதனால் நாங்களே எங்க கல்யாணத்தை நடத்திக்கிறோம். நீங்க ஆசீர்வாதம் பண்ணுங்கோ'ண்ணு தானே எழுதியிருக்கா. இதில் கோபப்படுறதுக்கு என்னஇருக்கு! தம்பி வீரபாண்டியன்கூட 'அவர் ரொம்ப நல்ல பையன்'னு இப்ப சொல்லிச்சே... நமக்கு மாப்பிள்ளை தேடுற சிரமத்தைத் தராம, தானாகவே ஒரு தகுந்தவனைத் தேடிக்கிட்டாளே'ண்ணு சந்தோஷப்படுறதை விட்டுட்டு...

(அவளுடைய பேச்சுபிள்ளையைக் கவர்வதுபோல் தெரிகிறது. அதனால் அந்தப் பேச்சு விஜயமூர்த்திக்குப் பிடிக்கவில்லை என்பதை அவர் முகம்காட்டுகிறது.)

விஜ : ஏய், கண்மணி ! ஒனக்கு ஒண்ணும் தெரியாது. நீ சும்மா இரு. இது எங்க குடும்ப விஷயம். இதில் நீ தலையிடாதே !

கண் : என்னங்க இப்படிச் சொல்றீங்க. நான் உங்க மனைவி; இந்தக் குடும்பத்து மருமக...

பிள்ளை : கண்மணி சொல்றதுல...

விஜ : (இடைமறித்து)... நீங்க சும்மா இருங்கப்பா. (கண்மணியைப் பார்த்து) ஏய், நீ உள்ளே போ ! உன்னை இங்கே யாரும் வெத்திலை பாக்கு வச்சு அழைக்கலை. உள்ளே போ நாயி ! நாயி !

(என்றதும், அதுவரை படுத்துக் கிடந்த நாய், மெதுவாக எழுந்து தன்னைத்தான் சொல்கிறாரோ என்று திகைத்துப் பார்க்கிறது ஒரு கணம். பிறகு அவருடைய மனைவியைத்தான் என்று நிச்சயப்படுத்திக்கொண்டு பழையபடி படுத்துக்கொள்கிறது.

எதுவும் சொல்லமுடியாமல் கண்மணி உள்ளே போகிறாள்)

விஜ : சரி அப்பா, இப்ப கமலா எங்கே இருக்கிறாள் ?

பிள்ளை : எங்க இருப்பா ? பூபதி வீட்டில்தான் இருக்கணும்.

விஜ : சரி, புறப்படுங்க !

(என்று புறப்படுகிறார். பிள்ளையும் உடன் செல்கிறார்.)

காட்சி 2.

அதே வீடு. அதே தாழ்வாரம். ஒரு பக்கத்தில் நடுக்கத்தோடு கமலா நிற்கிறாள். அவள் முகம் 'பேயறைந்து'போல – அதாவது 'பேய்'போல விஜயகமூர்த்தி அடித்த அடிகளைத் தாங்கி, தழும்புகளோடு–இருக்கிறது. வாயில் சுருட்டு நெருப்பும், அதே அளவு நெருப்பைக் கண்களிலும் தேக்கிக்கொண்டு, கோபாவேசமாக அவளைக் கவனித்துக்கொண்டிருக்கிறார் முத்தையா பிள்ளை. வீரபாண்டியன் எதுவும் நடக்காததுபோல் திரும்பவும் 'மெஞ்ஞான'ப் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருக்கிறான். விஜயகமூர்த்தி வீராவேசமாகத் தோற்றமளிக்கிறார். எல்லாவற்றையும் கதவிடுக்கு வழியாகக் கவனித்துக்கொண்டு நிற்கிறாள் கண்மணி.

விஜ : (கமலாவிடம்) உனக்கு எவ்வளவு திமிர் இருந்தா, இப்படி எங்களையெல்லாம் அலட்சியப் படுத்திட்டு அந்தப் பயலைக் கல்யாணம் செய்யவந்திருப்பே !

கமலா : அப்படியெல்லாம் இல்லைண்ணே. நான் வேணுமிண்ணு செய்யலை. என் பிரண்டு ஒருத்திகூட நம்ம அப்பா அம்மாகிட்ட சொல்லிப் பார்த்தா. அவங்க கண்டிப்பா முடியாதுண்ணுட்டாங்க. அதனால்தான் வேற வழியில்லைண்ணு. நாங்க இந்த முடிவுக்கு வந்தோம். எங்களை மன்னிச்சு, இந்தக் கல்யாணத்தை நடத்திவையுங்கண்ணேன்.

விஜ : உங் கல்யாணத்தை நான் நடத்திவைக்கிறதா ? அதுவும் அவனுக்கா ?

கம : அது என்னண்ணே அப்படிச் சொல்றீங்க. நீங்க அவருக்கே கல்யாணம் செய்றதாச் சொல்லித்தானே என்னை அங்கிருந்து கூட்டியாந்தீங்க...!?

— ப. புகழேந்தி —

விஜ : சீ, பேசாதே! திருட்டுக் கழுதை ! எங்கிட்டயேவா வழக்குப் பேசறே ! நான் யாரு, என் செல்வாக்கு என்ன...! 'விஜயகமூர்த்தி'ண்ணா உயிர் வர்ர மனுசன் கூட கண்ணை மூடிப்பான். நீ, அதிலயும் என்னோட தங்கச்சி... சீ ! சீ ! வாயை மூடு கழுதை ! கழுதை !

பிள்ளை : இந்தா கமலா ! நீ என்ன சொன்னாலும் நான் கேட்கப்போறதில்லை. இனிமே நீ அண்ணன் சொல்றதைத்தான் கேட்கணும் – என்ன சொன்னாலும் சரிதான்.

(விஜயகமூர்த்தியின் தலை கர்வத்தால் நிமிர்கிறது)

விஜ : ஆமா. நான் சொல்றதைத்தான் இனிமே நீ கேட்கணும். அந்தப் பய பூபதியை இத்தோட மறந்திடணும். உனக்காக நான் ஏற்பாடு செய்திருக்கிற வேறொருத்தனைத்தான் கட்டிக்கணும். இதுக்கு மேல் எதுவும் பேசப்படாது.

— அடுத்த இதழில் முடியும் —

அடுத்த இதழில்...
கண்ணதாசன்–
காதல்.

இரண்டு சக்கர வண்டி ஒன்று.

ஒரு சக்கரம் தேய்ந்து தேய்ந்து உருப் பெறுகிறது.

மற்றொன்று உருமாறாமலே இருக்கிறது. இருப்பினும் வண்டி ஒரே கதியில் ஓடிக்கொண்டிருக்கிறது.

அதற்குப் பெயர் காலம்.

இரண்டு சக்கரங்கள் வெங்கதிரும் வெண்மதியும்.

வெண்மதி தேய்வதற்கு விஞ்ஞானம் ஏதேதோ காரணம் சொல்கிறது.

விஞ்ஞானம் கிடக்கட்டும்.

நான் இப்படி நினைக்கிறேன்:

காலம் இரண்டு கூறுகளையுடையது.

ஒன்று தேய்ந்து மீள்வது.

மற்றொன்று சிலையாகச் சமைவது.

காலந்தருந் துயரம் தேயக்கூடியது.

மகிழ்ச்சி நிலையானது.

இந்த இரண்டு பந்துகளையும் ஆடிக்கொண்டு தான் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது.

மனிதன் அழுது வாழ்ந்தாலும் சரி; சிரித்து வாழ்ந்தாலும் சரி.

காலம் வழக்கமாகத் தன் காலடியை அவன் மீது வைத்துவிட்டே போகிறது.

படுத்தபடி கிடக்கிறது குழந்தை.

காலம் தன் காலை அதன்மீது வைக்கிறது.

குழந்தை குப்புறத் திரும்பப் பழகிக்கொள்கிறது.

காலத்தின் அடுத்த காலடி பதிகிறது.

குழந்தை தவழ்கிறது.

ஒவ்வொரு காலடியும் ஒவ்வொரு கட்டமாகிறது.

எழுகிறது; நிற்கிறது; நடக்கிறது.

ஒன்று காளை என்கிறது. ஒன்று நான் கன்னி என்கிறது;

அவர்களை அங்கேயே விட்டு விட்டுக் காலம் போகிறதா?

அழைத்துக்கொண்டே செல்கிறது.

ஒருவன் தந்தை என்கிறான்; ஒருத்தி தாய் என்கிறாள்.

காலடி அழுத்தமாகப் பதிகிறது.

தோலில் சுருக்கம் விழுகிறது.

பளபளவென்றிருந்த மேனி திரை திரையாய்ப் போகிறது.

ஒவ்வொரு திரையிலும் காலம் நின்று சிரிக்கிறது.

அது என்ன சிரிப்பு?

"உனக்கு வயதாகிவிட்டது. எனக்கு வயதாகவில்லை; பார்!" என்பது அது.

முகத்திரை போட்ட பெண்ணின் முகத்திலும் அது முத்திரை போடாமல் போவதில்லை.

மனிதனுக்கு மட்டும் தானா?

கொடி சருகிப்போகிறது.

மரம் பட்டுப்போகிறது.

அத்தனை கதையும் முடிந்தே தொடர்கிறது.

இறப்பு ஒரு கயிறையும் பிறப்பு ஒரு கயிறையும் போட்டுக் காலச்சை இழுத்துக்கொண்டேயிருக்கின்றன.

அதிலே உதிர்ந்து உதிர்ந்து அழுகிப்போவதுதான் உலகம்.

காலத்துக்கு நகைச்சுவை அதிகம்.

அதனால்தான் அது மனிதனைப் படைத்தது.

காலம் ஒன்றுதான்.

மனிதன் அதனை இரண்டாகக் கண்டான்.

சிரிப்பவனுக்கு நல்ல காலமாம்.

அழுபவனுக்குக் கெட்ட காலமாம்.

வேடிக்கை மனிதர்கள்.

வாழத் தெரிந்தவன், வாழத் தெரியாதவன் என்று மனிதனைப் பிரிப்பதற்கு வக்கில்லை.

நல்லது கெட்டது என்று காலத்தைப் பிரிக்கிறார்கள்.

காலத்தில் பேதமில்லை. அது வாழ்வைச் சமப்படுத்திக்கொண்டே இருக்கிறது.

வெற்றியிலே மயங்கிக் கிடந்தவனைத் தோல்விப் பக்கம் திருப்பி விடுகிறது.

தோல்வியிலே துவண்டு கிடந்தவனை வெற்றிப் பக்கம் இழுத்து வருகிறது.

இல்லையென்றால் வெற்றி ஏன் புத்தியைக் கெடுக்கிறது?

தோல்வி ஏன் அடக்கத்தை உண்டாக்குகிறது?

இது காலம் நடத்தும் நாடகம்.

வாழ்வு முழுவதும் சிலருக்கு; தாழ்வு முழுவதும் சிலருக்கு என்று முழுக்க முழுக்க ஒதுக்கியிருந்தால் உலகம் என்றைக்கோ அழிந்து போயிருக்கும்.

காலம் நம்மைவிட அறிவாளி.

அது இடைவிடாமல் இதைத்தான் கவனிக்கிறது.

எழுந்தவன் உட்காரவேண்டும்; உட்கார்ந்தவன் எழவேண்டும்.

மணி முற்ற முற்ற நெல் தலைசாய்க்கிறது.

தலை சாய்க்க மறுக்கும் தென்னை அடியோடு சாய்கிறது.

ஒரு பயிர் அறுவடையாகிறது.

மறுபயிர் விதைக்கப்படுகிறது.

ஊருணித் தண்ணீர் வற்றிவிடுகிறது.

புது மழையில் மறுபடி நிரம்புகிறது.

காலம் இடைவிடாமல் உலகத்தைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது.

நிச்சயம் நீ சாவாய் என்று அச்சுறுத்துகிறது;

அதை எதிர்த்து எந்த வீரன் வென்றிருக்கிறான்?

கடல் தண்ணீரை மேகம் இழுக்கிறது; அதை மழையாகப் பொழிகிறது.

கடல்நீர் உப்பு.

மழை நீரில் உப்பில்லையே!

அது எங்கே வடிகட்டப்பட்டது?

உண்மை இதுதான்:

ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்தெடுக்கும் ஆற்றலை, காலம் இயற்கைக்கு வழங்கிவிட்டது.

ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாதுகாப்பை வைத்திருக்கிறது.

ஆமைக்கு அவ்வளவு கடினமான ஓடெதற்கு?

மேனி மென்மை; ஓடு பாதுகாப்பு.

பாம்புக்கு நஞ்சை வைத்தது அதன் அழகுக்கொரு பாதுகாப்பு.

எந்த இனத்துக்குப் பெருக்கம் அதிகமோ, அந்த இனம் உணவாகப் படைக்கப்பட்டிருக்கிறது.

மீன், ஆடு, கோழி – இவற்றை மலடேயில்லாமல் படைத்திருக்கிறது காலம்.

புலி சிங்கங்களின் இனப்பெருக்கம் குறைவு.

அதைப் பாதுகாக்கக் கொடிய குணம்.

காலம் உலகத்தைச் சமப்படுத்திக்கொண்டே இருக்கிறது.

மனிதன் நம்பிக்கையை இழந்தாலொழிய, காலம் அவனைக் கைவிடுவதில்லை.

கொஞ்சம் நெஞ்சைத் தட்டிவிட்டுக்கொண்டு நிமிர்ந்து உட்கார்.

உன் பொழுதும் விடியும்.

மனித தத்துவம் முரண்படலாம்; கால தத்துவம் முரண்படாது.

பத்தாண்டுகளுக்கு முன்னால் பஞ்சு மெத்தையிலே யார் யாரையெல்லாம் நான் பார்த்தேனோ, அவர்களை எல்லாம் இன்று பாதை ஓரத்தில் பார்க்கிறேன்.

அன்று பஞ்சையாகத் திரிந்தவர்கள் இன்று பள பளக்கும் மோட்டாரில் போகிறார்கள்.

காலம் இந்த விளையாட்டை விளையாடியே தீரும்.

நான் காலத்தைப் புரிந்துகொண்டிருக்கிறேன்.

அது என்னிடம் விளையாடும் விளையாட்டுக்கெல்லாம் நானே தலைமை வகித்துக்கொண்டிருக்கிறேன்.

நான் என்பதை எனக்கு வைத்துக்கொண்டு நானை என்பதைக் காலத்துக்கு விட்டுவிட்டேன்.

நான் கேள்வி கேட்கிறேன்; காலம் பதில் சொல்கிறது.

சில சமயங்களில் காலம் என்னிடம் கேள்வி கேட்கும்;

நான் பதில் சொல்வதில்லை.

ஓங்கி அதை அறைவேன்;

ஓடிப்போய்விடும்.

மறுநாள் என் காலடியில் வந்து உட்கார்ந்திருக்கும்;

நான் அதற்கு ஆறுதல் கூறுவேன்.

இவ்வளவு வலிய காலம் எனக்கு ஏன் அடங்குகிறது?

காரணம் இதுதான்:

அது அடிக்கும்போது நான் அழுவதுமில்லை; அணைக்கும்போது சிரிப்பதுமில்லை.

காலம் என்னிடம் தோற்றுவிட்டது.

நூல் நயம்

— செல்லையா —

சீவபந்து சீபால்
(மணிவிழா மலர்)

இயற்றியவர்கள் :

சிறுவை. மோகனசுந்தரன்
வித்துவான் கா. சி. தனக்கோடி.

"சமயத்தின் பெயராலும் தெய்வத்தின் பெயராலும் உயிர்களைப் பலியிடுதல் காட்டுமிராண்டித் தனத்தின் கையிருப்பு"

— காந்தியார்

"கோயில்களில் விலங்குகளைப் பலியிடுவதற்கு ஏற்பாடு செய்யப் படுகிறது என்று கேட்க மிகவும் வருந்துகிறேன். அவ்வாறு பலியிடுதல் காட்டுமிராண்டித்தனமான தென்றும் மதத்திற்கு இழுக்குத் தருவதென்றும் நான் கருதுகிறேன்."

—நேரு.

இப்படிச் சொற்களை அவர்கள் வாயிலிருந்து வரவழைத்தவர் யார்? ...வர்தான் தமிழன்பர் திரு. சீபால்.

..., வாழ்வு முழுதும் குறிப்... சில இலட்சியங்களுக்காவே ...ராடி அவ்வவற்றில் தம் ...பயரைப் பொறித்துக்கொள்கின்றனர். எலன்கெல்லர் குருடு-செவிடு-ஊமைகளுக்கென்றே உழைத்து வெற்றி கண்டிருக்கிறர். தனித் தமிழியக்கத்துக்கென்றே தன்னை ஒப்படைத்துவிட்டதால் வெற்றி பெற்றவர் மறைமலையடிகள். நீக்ரோக்களின் உரிமைக்கு உழைப்பதற்கென்றே, தன்னை பலியாக்கிக் கொண்டவன் லிங்கன். அதேபோல் தமிழகத்தில், உயிர்ப் பலியைத் தடுப்பதற்கென்றே முனைந்து நின்று உழைத்து வெற்றி கண்டவர் திரு. சீபால். உயிர்களின்மேல் வைத்த அன்பால் சீவபந்து எனப் பெயர் பெற்ற இப்பெரியாரின் மணிவிழா அண்மையில் நடந்ததை அறிவோம். அன்று அவர்களைப் பாராட்டும் முகத்தான் அழகிய மலர் ஒன்றை, பாராட்டுக் குழுவின் சார்பில் ஆசிரியர்கள் உருவாக்கி வெளியிட்டிருக்கின்றனர். நூலின் முற்பகுதியில் பல துறையினரின் பாராட்டுச் செய்திகளும் பிற்பகுதியில் அவரது வாழ்க்கைக் குறிப்புக்களும் உள்ளன; அடக்கமான பதிப்பு.

60 ஆண்டுகளில் மறைக்கப்பட்ட பல அரிய செய்திகளையெல்லாம் அழகுறத் தொகுத்துத் தந்திருக்கும் ஆசிரியர்களின் முயற்சியும் போற்றற்குரியது. ஆசிரியர்கள் கருதுவது போல, இத்தொண்டரின் வாழ்க்கை, இன்னும் பல பொதுத் தொண்டர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

விலை ரு: 2-00

பதிப்பகம் :

திருத்தக்கதேவர்
இலக்கிய மன்றம்,
34, சுப்பிரமணிய முதலி தெ...
சென்னை-1.

திறந்த வாயில்

ஆசிரியை : எலன்கெல்லர்.

இது ஒரு தத்துவப் பூங்கா.

எலன்கெல்லர் குழந்தைப் பருவத்தில் குருடும் செவிடும் ஊமையுமான ஓர் "அற்பப் பிண்டம்"; உற்றார் உறவினர்கூட அவளுக்கு அன்பைத் தரவில்லை. அந்த எளிய பிறவியிடம்—உலகத்தைக் காணமுடியாத, உலகத்தைக் கேட்கமுடியாத, உலகத்தைச் சொல்லமுடியாத அந்த எளிய பிறவியிடம், ஒருத்தி அன்பு காட்டினுள். அற்பப் பிறவியின் பெயர் எலன்கெல்லர்; அன்பு காட்டியவளின் பெயர் ஆன்னி சல்லிவன்மேரி.

மேரி காட்டிய அன்பால் வளர்ந்தெழுந்த கெல்லர் இன்று உலகெங்கும் உள்ள பல்லாயிரம் பேருக்கு உலகைக் காட்டுகிறுள்; உலகைச் சொல்கிறுள்; உலகை உணர்த்துகிறுள். அதனுல் அந்தப் பல்லாயிரம் குருடு-செவிடுகளோடு, கண்ணுள்ளோரும் காதுள்ளோரும் வாயுள்ளோரும் என வேறு பல கோடி மக்களும் நற்பயன் பெறுகின்றனர். சிந்தனைக்குச் சில விருந்துகளையும் பெறுகின்றனர்.

அவ்வகையில் எலன்கெல்லர் அவ்வப்போது அளித்த-எழுதிய-கருத்துரைகளின் தொகுப்பே, இது. பயனுள்ள—எல்லோருக்கும் பொதுவான சில உண்மைகள் நிறைந்த இத்தொகுப்பு ஒரு நல்ல வழிகாட்டி:

இளங்கோவனின் மொழிபெயர்ப்பும் தங்கு தடையின்றிச் செல்கிறது.

கருத்து முத்துக்களை, தந்தப் பேழையில் வைத்ததுபோலிருக்கிறது நூலின் அமைப்பு.

விலை 50 காசுகள்.

★

அணுசக்தியின் எதிர்காலம்

(உண்மைகள்-தீமைகள்-வாய்ப்புகள்.)

ஆசிரியர்கள் : எட்வர்ட் டெல்லர் & ஆல்பர்ட் எல். லேட்டர்.

"அணுக்களையோ வெடிகுண்டுகளையோ அதிர் இயக்கத்தையோ பற்றி ஒன்றுமே தெரியாத சாமானிய மக்களுக்கு என்றே இந்நூல் எழுதப் பட்டிருக்கிறது. இந்த உலகம் அணுக்களால் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதும் அணுக்குண்டுகள் அதை அழித்துவிடக்கூடும்என்பதும், கதிர் இயக்கமானது அதை இனிய வாழ்வுக்கு ஏற்றதல்லாத இடமாக ஆக்கிவிடக்கூடும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்!" என்ற முன்னுரைத் தொடக்கத்துடன் உள்ள இந்நூல் சில நல்ல விளக்கங்களைத் தருகிறது. பொறுமையாகப் படிப்பதற்கு திரு. அப்புசாமி தம் மொழிபெயர்ப்புத் திறன்மூலம் உதவுகிறர். ஆனுல் அறிவியல் துறை முன்னேற்றம்பற்றி எழுத வந்த அவர் வீண் பிடியாக இன்னும் "விஞ்ஞான"த்தையும் "கிரியையை"யும் வைத்துக் கொண்டு தமிழின் முன்னேற்றத்தைத் தடுக்கப் பார்க்கிறர்.

விலை ரு. 1-00.

★

நாளை உதயம்

ஆசிரியர்: தாமஸ் ஏ. டூலே எம். டி.

ஆப்பிரிக்க நாட்டுப் பழங் குடிகளைப் பேணி வரும் விந்தை மனிதருக்குப் பெயர் டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர். அவரது தொண்டுகளைக் கேள்வியுற்று அவருடன் தொடர்பு கொண்ட ஒருவருக்கு அவரைப் போலவே தொண்டு செய்ய ஆவல் கிளம்புகிறது.

அவரும் அவரது நண்பர்களுமாக அறுவர் லாவோவில் பிணியில் உழன்ற மக்களிடை சென்று மருத்துவ உதவிகளைச் செய்கின்றனர். அந்தச் சுவையான அனுபவங்களைக் கூறும் இந்நூல் ஒரு வகையில் பிரச்சார நூலே. எண்ணமுடியாத வியாதிகளையும் அவற்றை ஏதோ என்னவோ என்றெண்ணி மருண்ட மக்களின் அவநம்பிக்கைகளையும், இவர்கள் துணிந்து அம்மக்களை அணுகி நோய் நீக்கிய காட்சிகளையும் சுவையாகச் சொல்லியிருக்கிறர்கள்.

சோசலிச எண்ணம் கொண்ட திருமதி எஸ். விசயலட்சுமி எம். ஏ., எம். லிட். அவர்கள் இந்நூலை மொழி பெயர்த்திருக்கிறர்கள். நடை தங்கு தடையின்றிப் போகிறது.

நல்ல முயற்சி.

விலை : 75 காசு.

இம்மூன்று நூல்களையும் வெளியிட்டோர் :

பேர்ல் பப்ளிகேசன் (பிரைவேட்) லிமிடெட், பம்பாய்.

விற்பனை உரிமை :

இந்தியா புக் அவுஸ்,
193, மவுண்ட்ரோடு,
சென்னை-2.

சீவபந்து சீபால்:

"நாம் நமது பாரதநாட்டின் வரலாற்றைப் படித்துள்ளோம். தெய்வத்தின் பெயராலும் எவ்வளவோ கொடுமைகள் நம் நாட்டில் நிகழ்ந்துள்ளன. மக்களைத் தவருன வழியில் செலுத்தியதால் நாட்டில் மூடநம்பிக்கைகள் வளர்ந்துவிட்டன. இத்தகைய மூடநம்பிக்கைகளை அவ்வப்போது தோன்றிய அறிஞர் பெருமக்கள் பலவாறு முயன்று அகற்றியுள்ளனர். தெய்வத்தின் பெயரால் நரபலிகள் நடந்து வந்தன. அவைகள் ஆங்கில அரசியலார் வருவதற்கு முன்னரே அகன்றன. உடன்கட்டையேறும் கொடிய பழக்கம் இராஜா ராம்மோகன்ராய் அவர்கள் பெருமுயற்சியால் அழிந்தொழிந்தது. உடலெங்கும் அலகு குத்திக்கொள்ளும் கொடூரமான தெய்வ வழிபாடு தஞ்சை வீரசிங்கம்பேட்டை கலகத்திற்குப் பின்னர் ஆங்கில அரசியலாரால் தடை செய்யப்பட்டது. நாடு சுதந்தரம் பெற்றது. மகாத்மா காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய நம் சீவபந்து சீபால் அவர்கள் பெருமுயற்சி செய்து 1-6-51-ல் உயிர்ப்பலியை ஒழித்தார்."

★

அணுசக்தியின் எதிர்காலம்:

"நமக்குத் தெரியாதவைகளையும் விளங்காதவைகளையும் பற்றிய அச்சம் நம்மில் எல்லாக் காலங்களிலும் இருந்து வந்திருக்கிறது; தன்னுடைய ஆயுளுக்கு முடிவு உண்டு என்று அறிந்த மனிதனுடைய மனம் அதைக்காட்டிலும் பயங்கரமான மற்றேர் அச்சக் கனவுக்கு — அதாவது; தான் வாழும் உலகம் முழுவதற்கும் ஓர் முடிவு உண்டு என்னும் அச்சக் கனவுக்கு — பலகாலும் இரையாகிறது. இந்த விஞ்ஞான யுகத்திலே, பழங்காலத்துப் பேரச்சங்கள் யாவும் அறிவோடு ஒவ்வாப் பூச்சாண்டிகளாக ஒடுங்கிப்போய் விட்டன. ஆயினும் ஒன்றுமட்டும் இன்னும் நம்மை அச்சுறுத்தி நிற்கிறது அது பேரளவுள்ளது; நிரந்தரமானது நாம் ஒருவருக்கு ஒருவர் என்ன செய்யப் போகிறேம்? நம்மையே நாம் என்ன செய்துகொள்ளப் போகிறேம்? என்பதே அந்த அச்சம்."

★

திறந்த வாயில்:

"அமைதியும், சிருஷ்டிப்பணியும், அழகுதர வாழும் ஆனந்த மயமான குழந்தைகளும், ஆண்களும், பெண்களும் கலந்தே புத்தியுள்ள ஒரு சமூகத்தின் செல்வங்களாகும். ஆனுல் இத்தகைய சமுதாயம் தெய்வசங்கற்பத்தால் ஏற்படக்கூடியதல்ல; அதை நாமே உருவாக்கவேண்டும். நமது தலைவிதியை எதிர்நோக்கும் பொறுப்பு நமதே; உறுதியின் நம்பிக்கையின்றி அதைச் செவ்வனே செய்யமுடியாது. நம்பிக்கை என்பது நடைமுறைக்கு உகந்ததல்ல; காற்றடிக்கும் போக்கிலேதான் நாம் செல்லவேண்டும் என்றெல்லாம் வெகு காலமாகச் சொல்லப்படுகிறது. ஆனல் அசிரத்தையும் சமரசமும் குழப்பத்தையே உண்டாக்கும் எனும் உண்மை இப்பொழுது நம்மைத் துளைத்துக் கொண்டிருக்கிறது."

★

நாளை உதயம்:

"லாவோ நாட்டில் ஜனன மரண விகிதத்தைப்பற்றிய புள்ளிவிவரம் எதுவும் கிடையாது. அதைக் குறித்து நான் கீழ்க்கண்டவாறு கணக்கிட்டிருக்கிறேன்: கர்ப்பமாகிறவர்களில் ஐம்பதுசத விகிதத்தினர் பூர்ண பிரசவமாவது கிடையாது. நூறு குழந்தைகள் கர்ப்பத்திலிருந்தால் ஐம்பதுதான் உயிருடன் பிறக்கும். இந்த ஐம்பதில், குழந்தைப் பருவத்திலிருந்தே வைசூரி, மலேரியா, கக்குவான், இருமல், நிமோனியா போன்ற வியாதிகளால் பீடிக்கப்பட்டு இருபது இறந்து போய்விடும். இந்த முப்பதில் மலேரியா, விஷசுரம், சீதபேதி இவைகளில் சிறுவர்களாக இருக்கும்போதே பத்து மரணமடைந்துவிடும். எஞ்சி நிற்கும் இருபது பேர்கள் தொண்ணூறு வயதுவரையில் வாழ்வர்."

"ஆமை" பெற்ற குறட்பாக்கள்

கடந்த இதழில் "ஆமை" பெற்ற குறட்பாக்களினைக் கணக்கிட்ட வகை பற்றி எழுதியிருந்தோம். இவ்விதழில் "ஆமை" பெற்ற குறட்பாக்களின் பட்டியலையும் பங்கெடுத்துக்கொண்டோர் பெயர்களையும் தருகிறோம். இனி ஒவ்வொரு போட்டியிலும் கலந்து கொள்ளும் தோழர்கள் தங்கள் மாவட்டத்தையும் குறித்தனுப்புதல் நலம்.

★

உள் நாடு:

சென்னை மாவட்டம்

பத்மநாபன், மதிஒளி, ஆ சானகிராமன், சுகராசன், இரா. செகதீசன், க. ச. கணேசன், இரா. குமாரவேல், கொ. முரசு, பா. இரா. பா., கே. எஸ். மணி, ந. இளமாறன், வி. அ. நெய்னுர், கு. செந்தமிழ்ச்செல்வன், இரா. மணிவாசகம், வாராதி. முத்தழகி, புதுவை ச. அருணன், தி. ந. ராதாகிருட்டிணன், நா. இராமச்சந்திரன், இ. பா. ஸ்டீபன், மாசிலாமணி, க. அறிவிற்கரசன், க. வேணு, நெல்லை கபிலன், மு கிருட்டிணசாமி, சிவன், சி. தண்டபாணி, சூ. ச. அன்பழகன், சடகோபன், த. மா. வேணுகோபால்.

தஞ்சை மாவட்டம்

ரெ. மல்ல பிள்ளை, பீ. ஏ., பி. டி., சு. அய்யாவு, முருகு இளங்கோ, கணபதி, இர. தனசேகரன், வ. ஆதவன், கயற்கண்ணன், கு. ரா. இராமலிங்கம், சோ. வெங்கடாசலம், இரா. செயராமன், எஸ். ஆர். பரசுராமன், க. குமார்.

மதுரை மாவட்டம்

ஆ. வேங்கடநாராயணன், க. பாலு, கு. குட்டுவஞ்சேரல், எஸ். சந்திரன், சங்கரன், சில்லை. நல்லாளன், எஸ். மணிமாறன், எ. பி. எஸ். வாசன், இரா. சீனிவாசன், அ. இரத்தினசாமி, வேம்பை. இராமையா, பா. கோவர்த்தனன்.

கோவை மாவட்டம்

ம. வின்செண்ட், இரா. கெட்டிமுத்து, கோ. இரா. சோமசுந்தரம், மாயூரம் ந. இராமநாதன், பி. திவாகரன், சா. விடுதலைவிரும்பி, ஆ. வெ. செல்லமுத்து, சு. அறிவானந்தம், அன்பு. கு. தருமலிங்கம், கி. கந்தராசன், தமிழ்த்தம்பி, காஞ்சி. எம். ஏ. லத்தீப்கான்.

செங்கல்பட்டு மாவட்டம்

ஆர். எம். பி. பண்பரசன், கோ. கோட்டீசுவரன், சா. அமீது, தி. க. தனசேகரன், பெரி. எழிலன், செ. மனமயக்கழகன்.

நெல்லை மாவட்டம்

முகம்மது கனி, சு. ஐயாத்துரை, பா. மணிமாறன், அன்பு. பா அ. ஆறுமுகம், அ. ச. வேங்கடராமன், சீ. தங்கசாமி, ம. புல்லையா, பா. இசுமாயில், பிர. சொக்கலிங்கம், ஆ. சி. பொன்னையா.

இராமநாதபுரம் மாவட்டம்

வை. சுப்பிரமணியம், கோ. தாட்பிரே, வி. சிவப்பிரகாசம், எ. சி. சுந்தரராசன், ஆர். திருவேங்கடம், இரா. கொ. அரசு, கி. மு. சேசன், மா. கைலாசம், இராம. சேது, அரு. காளையப்பன்.

தெ. ஆ. மாவட்டம்

கோ. வெ. கண்ணன், இல. அருணசலம், புதுவை. பாலமுனுசாமி, துரை மகாலிங்கம், "மலர்விழி", நல். பெரியசாமி, பி. கே. கலியப்பெருமாள், ச. இராமையன்.

வட ஆற்காடு மாவட்டம்

குவலயன், கு. உருத்ரகோடி, துரை, வேலை. எஸ். எழில், வேலை. முகிலன், பே. வசந்தகுமாரி, கோ. கூத்தரசன், கோ. சங்கர், வெ. நடராசன், க. பொ. இளம்வழுதி, இரா. தமிழ்ப்பித்தன், எ. ஆர். சகஸ்ரநாமம், பு. மல்லேசன்.

திருச்சி மாவட்டம்

குமாரமங்கலம், மணவழகன், ம. கிருட்டிணன், துரை, மு. கணேசன், சி. சு. தேவராசன், வீர. வேங்கடாசலம், கு. ஆ. தேன்மொழி, முத்து. சுப்பையா, செ. பிச்சைமுத்து. கமலதாசன், திராவிடக்குழந்தை, மா. சந்தானம், பா. குழந்தைசாமி, செ. சீனிவாசன், வெ. மு. குமார், கா. கோபாலன்.

சேலம் மாவட்டம்

பி. கோவிந்தசாமி, கண்ணை உ. ச. வள்ளிநாயகம், எஸ். பழனி, மு. இரத்தினம், க. திருநாவுக்கரசு, இரெ. அறிவழகன், இரா. இராமசாமி, கா. இராசு.

கன்யாகுமரி மாவட்டம்

அ. அரிகோபால்.

கேரள மாநிலம்

மாதவன், சங்கரன், சாலை-செயராமன்.

கருநாடக மாநிலம்

பசவப்பா, கா. அங்கமுத்து, பிரமலிங்கம். இரா. வி. கனகராசன், மா. வாணி.

வெளிநாடு :

பர்மா

ஆறுமுகம், கதிரேசன், மணிவண்ணன்.

ஈழம்

தனபாலசிங்கம், கண்டி செ. ச. நாதன், ஈழமணி.

மலை நாடு

முத்தப்பா, ஞானமணி, நாகலிங்கம்.

அதிகார எண்.	பாடல் எண்.	சொற்கள்.
		அறத்துப்பால்.
1	4	வேண்டாமை
4	38	படாஅமை
10	94	துவ்வாமை
12	115	கோடாமை
,,	118	,,
13	121	அடங்காமை
13	126	ஆமைபோல்
15	150	நயவாமை
16	154	நீங்காமை
18	178	அஃகாமை
,,	,,	வெஃகாமை
,,	180	வேண்டாமை
20	197	சொல்லாமை
23	223	உரையாமை
24	236	தோன்றாமை
26	254	கொல்லாமை
,,	255	உண்ணாமை
,,	257	உண்ணாமை
,,	259	உண்ணாமை
27	261	செய்யாமை
29	281	எள்ளாமை
,,	,,	கள்ளாமை
30	296	பொய்யாமை
,,	,,	எய்யாமை
,,	297	பொய்யாமை (2)
,,	,,	செய்யாமை (2)
31	308	வெகுளாமை
32	311	செய்யாமை
,,	312	செய்யாமை
,,	316	துன்னாமை
,,	317	செய்யாமை
33	321	கொல்லாமை
,,	323	கொல்லாமை
,,	,,	பொய்யாமை
,,	324	கொல்லாமை
,,	325	கொல்லாமை
,,	326	,,
37	362	பிறவாமை
,,	,,	வேண்டாமை
,,	363	வேண்டாமை
		பொருட்பால்.
39	382	அஞ்சாமை
,,	,,	எஞ்சாமை
,,	383	தூங்காமை
		பொருட்பால்—தொடர்ச்சி.
43	428	அஞ்சாமை
44	440	அறியாமை
45	442	உறாஅமை
47	466	செய்யாமை
49	482	தீராமை
52	520	கோடாமை
53	529	அமராமை
54	536	இழுக்காமை
,,	,,	வழுக்காமை
59	589	உணராமை
60	596	தள்ளாமை
62	611	அசாவாமை
63	630	இன்னாமை
66	655	செய்யாமை
67	662	ஒல்காமை
,,	667	எள்ளாமை
70	692	விழையாமை
71	701	கூறாமை
,,	704	கூறாமை
78	779	இகவாமை
84	833	நாணாமை
,,	,,	நாடாமை
,,	,,	பேணாமை
86	852	செய்யாமை
87	866	பேணாமை
89	886	ஒன்றாமை
,,	,,	பொன்றாமை
90	891	இகழாமை
93	925	(கை) அறியாமை
,,	,,	(மெய்) அறியாமை
96	953	இகழாமை
		காமத்துப்பால்.
110	1095	நோக்காமை
111	1110	அறியாமை
116	1151	செல்லாமை
119	1181	நல்காமை
,,	1190	,,
124	1232	நல்காமை
129	1282	ஊடாமை
130	1295	பெருஅமை
131	1304	உணரா

★ மொத்தம் 71 குறள்களில்
வந்துள்ளன.

எழுத்தாளர் ஒருவரின் அறிக்கை

"விடுதலை"யார்க்கு

அன்புடைய
தமிழ்ப்பெருமக்களே!

தமிழ் எழுத்தாளர் சங்க இடைக்காலப் பேரவை 15-11-'59 ஞாயிறு காலை 9 மணிக்குச் சங்கப் பணிமனையில் திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் தலைமையில் கூடியது. கூட்டத்தில் முதலாவதாக எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் "திருத்தப்பட்ட அமைப்பு விதிகள்" ஆகும். இவை மொத்தம் 33 ஆகும். கூட்டம் மிகக் கண்ணியமான முறையில் துவக்கப்பட்டது. அந்த அமைப்பு விதிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் செயலாளரால் படிக்கப் பட்டன. ஒவ்வொரு விதிகளிலும் பல வடமொழிச் சொற்கள் இருந்தன. தொடக்கத்திலேயே "அமைப்பு விதிகள்" என்பதற்கு "**யாதாஸ்து**" என்று போடப்பட்டு இருந்தது. அதனை 'அமைப்பு விதிகள்' என்று மாற்றுமாறு வேண்டப்பட்டது. மேலும் **விலாசம், வியாபித்து, விஸ்தரிக்கும், அர்த்தம், பிரதிவருஷம், நிர்வாகம், உத்யோகஸ்தர்கள், மனுதார், பிரவேசம், சிபாரிசு, நோட்டீஸ், கௌரவம்,** இப்படிப் பல சொற்கள் ஒன்றன்பின் ஒன்றாக வடமொழிக்கும் பிறமொழிகட்கும் பதில் தமிழ்ச் சொல்லாக மாற்றப்பட்டது.

தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற காரணத்தினுல் அமைப்பு விதிகள் தமிழ்ச் சொற்களால் ஆக்கப்பட்டிருக்கட்டும் என்ற விழுமிய நோக்கத்தால் தமிழ் மொழியின்மீது பற்று கொண்ட எல்லா வகையான (காங்கிரஸ், கம்யூனிஸ்ட், தி. மு. க., முஸ்லீம் லீக்) எழுத்தாளர்களும் ஆதரவளித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. 10-வது விதி ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், பிற்பகல் மணி 1-30 ஆகிவிட்டது. எல்லோரும் பசிக்கிறது என்று சொன்னதனுல் கூட்டம் ஒத்திவைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி சிலர் ஒத்திவைக்கலாம் என்றும், சிலர் பசியுடன் தொடர்ந்து நடத்தலாம் என்றும் கருத்துவேறுபாடுகள் தெரிவித்தனர். ஆகவே இக்கருத்துக்கள் ஓட்டுக்கு விடப்பட்டு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்மொழி வாழவேண்டும், நாம் செய்யும் நடைமுறை செயல்கள் தூய தமிழாக இருத்தல் வேண்டும் என்ற காரணங்களை விவாதித்தார்கள். ஒருவர் உரக்கப் பேசினுர், ஒருவர் மெள்ளப் பேசினுர். வடமொழி வேண்டும் என்று சொன்னவர்கள் தான் எழுந்தெழுந்து பேசினுர்கள். தலைவர் அவர்களுக்குத் தவருன முறையில் "**வீட்டோ பவர்**" முறைகளை சொல்லத் துவக்கினர் சிலர். அங்ஙனம் தலைவரைத் தவருன பாதையில் செலுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

அண்மையில் விடுதலையார் தமிழர்களின் பண்புக்கு மாருக, "காங்கிரசுக்கோ, பார்ப்பனர்களுக்கோ ஓட்டுப் போடுங்கள்" என்று கூறி வந்தார்கள். ஆனுல் எழுத்தாளர் சங்கத்திற்கு விடுதலையின் பிரதிநிதியோ, செய்தியாளரோ வரவில்லை. "கண்ணீர்த்துளிகள் என்று **கூறப்படும்**" என்றும்; "கூச்சலிட்ட**னராம்**" என்றும்; "வெளியேறிவிட்ட**னராம்**" என்றும் சான்று இல்லாமல் இதழ்களின் கண்ணியத்தை மீறித் தவருன தன்மையில் ஒரு குறிப்பிட்டவர்களை மட்டும தாக்கிக் கண்ணை மூடிக்கொண்டு எழுதுவது, நாகரிகத்துக்கும் குடியரசுப் பண்புக்கும் இழுக்காகும். மேலும் தூய தமிழ் மொழியை விரும்புவது கண்ணியமில்லை என்று சொன்னுல், தன்னைப் பெற்று எடுத்தவளை அன்னை என்று சொல்ல வேண்டாம் என்பது பொருள் அல்லவா?

தயவு செய்து விடுதலையார் அவர்கள், "நாளை முதல் இந்தி மொழியோடு சமஸ்கிருத மொழியையும் சேர்த்துப் படிக்கலாம்" என்று அறிக்கை விடட்டும்; மிகவும் நல்லது.

பாவம் விடுதலைத் தமிழர், "கோலிழந்த குருட்டு மனிதன் இருட்டறையில் தடுமாறிடுவது போல் திணறி வருகிருர்" என்பதல்லால் வேறு ஒன்றும் காட்டவில்லை. இந்தப் பரிதாபமான நிலையைக் கண்டு தமிழக எழுத்தாளர்கள் பலர் வருந்துகிருர்கள்.

அன்புள்ள,
"**பூதப்பாண்டியன்**"

சென்னை—1.
16-11-'59

நக்கீரர் கழகம், சென்னை.

**மறைமலையடிகள்
ஆராய்ச்சிக் குழு**

இரண்டாவது கூட்டம்.

நாள்: **2-12-'59.**
காலம்: **மாலை 6 மணி.**

இடம்:
தொண்டைமண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப்பள்ளி.

தலைவர்:
**டாக்டர் உயர்திரு.
மா. இராசமாணிக்கனுர்.**

சொற்பொழிவாளர்:
**டாக்டர் உயர்திரு.
மு. ஆரோக்கியசாமி,**

பொருள்:
"... வரலாற்றில்
...பிடர்"

... வருக.

நாடக விமர்சனம்

குலக்கொடி.

ஜெயா—சோமசுந்தரம்

எளிமையில் வாடும் ஒருவன் தன் காதலியை அடையமுடியாமல் வாடுகிருன். அவளை மணந்துகொண்ட கிழவனின் மகன் சேலத்து மாமாவின் மகளைக் காதலிக்கிருன். இரண்டு காதல்கள்; இரண்டுமே நிறைவேற முடியவில்லை இதனுல் நல்லவன் தீயவனுகிருன்; மற்றவன் நல்லவனுகிருன். இறுதியில் அவரவர் செயலுக்கு அவரவர் வருந்துகின்றனர். ஒருவன் காதல் இடிந்த கோட்டையாகிறது; மற்றவன் காதல் புயலுக்குத் தப்பிக் கரை சேர்கிறது. இப்படி ஒரு கதையைப் புது முறையில் சொல்ல முயன்றிருக்கிருர் கதாசிரியர். இம்முயற்சி சின்னுட்களுக்குமுன் குலக்கொடி என்ற பெயருடைய நாடகமாக மயிலாப்பூர் ஒய். எம். ஐ. ஏ. மண்டபத்தித்தில் அரங்கேற்றப்பெற்றது. நடிகர் ஓ. ஏ. கே. தேவர் தலைமையேற்று நடிகர்களைப் பாராட்டினுர்.

இராதையாக நடித்த ஜெயாவும் அவரது குழுவினரும் நாடகத்தை ஒரு நல்விருந்தாகவே படைத்தனர். குமார் என்ற சிக்கலான பாத்திரத்தை ஏற்று நடித்த தோழர் சோமசுந்தரம் நல்ல முறையில் தம் திறமையைக் காட்டினுர். சில கட்டங்களில் அவர் காட்டிய முகபாவமும் உச்சரிப்புத் திறனும், நல்லதோர் ஒளிமிக்க எதிர்காலம் அவர் பக்கம் வருவதைக் காட்டுகின்றன. அல்லியைத் தன்னுடன் சாவுக்கழைத்துச் செல்ல வந்திருப்பதாக அவர் சொல்லும் கட்டம், பண்பட்ட நடிப்புத்திறனுக்கு மேலும் ஒரு சான்று.

ராதையாக நடித்த ஜெயாவின் நடிப்பில் கவர்ச்சியும் துடிப்பும் இருக்கிறது. ஆசைக்கும் கடமைக்கும் ஊடே தத்தளிக்கும் ராதையாக அவர் வருவது, மக்கள் மனத்தை உலுக்கி வைக்கும் காட்சிகளாக அமைந்தது ஒரு நல்ல வெற்றி.

நகைச்சுவையை வாரி வழங்கினர், எஸ் ஆர். கோபால், கிருட்டிணன் முதலியோர்.

கதாசிரியர் நெல்லை இரணியன் நன்கு முயன்று கதை எழுதியிருப்பதோடு "குமாஸ்தா பிள்ளை"யாகவும் நடித்தார். பாடல்களை எழுதிய அழகாபுரிசக்திவேல், ராதையின் தந்தையாக வந்தார். அவருக்கு ஒப்பனை ஒரே மாதிரியாக அமைவது நன்றன்று. ஒரே கோட்டும், தவறினுல் துண்டும்தான் அவரை அலங்கரித்தன.

அல்லியாக நடித்தவரின் துடிப்பும், இராசாவின் தந்தையாக நடித்தவரின் பரிதாபமும், "கல்யாணிக்குட்டி"யின் அவியலும், கண்டோரைக் கவர்ந்தன.

பாடலிலும் பிற பயிற்சிகளிலும் இன்னும் கவனம் செலுத்தினுல், வெற்றி இவர்களைத் தழுவுவது கடினமன்று.

—**கண்டு வந்தோன்**

திரை உலகத்தின் புதுமை ஏடாக, இலக்கியப் பகுதியும் தாங்கி, தலைசிறந்த தமிழக எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களுடன்

டிசம்பர் முதல் நாள் முதல்

தமிழகமெங்கணும் உலவ மீண்டும் வருகிறது

"திரை முழக்கம்"

ஆசிரியர்கள்:

திரைப்பகுதி
ஆர் வி. பி. கரிகாலன்

இலக்கியப்பகுதி
தஞ்சை ப. அன்பரசன்
(ப. இராசாராம்.)

எங்கும் முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

நிர்வாகி, "திரை முழக்கம்",
**17-பி. நாயர் வரதபிள்ளை தெரு.
சென்னை-14.**

குமரியும் பூத்தனள் குறிஞ்சி நாட ! - மா. பாண்டியன்

"காதலின் காலம் எது ?"

"யாருக்குத் தெரியும் ?"

"நெஞ்சப் பிணைப்புக்கு ஓர் உவமை ?"

"சொல்லத் தெரியவில்லை."

"பருவச் சிரிப்பின் ஆற்றல்...?"

"பருகித் திளைப்பவர்க்கே தெரியும் !"

★

"சொல்லத் தெரியாதது எது ?"

"காதல் !"

"உணர்விற்கும் அப்பாற்பட்டதா ?"

"இல்லை !"

"நீ காதலித்திருக்கிருயா ?"

"இல்லை !"

"பின் எப்படிச் சொல்கிருய் ?"

"நீ கேட்கிருய். நான் சொல்கிறேன். ஆனல் எனக்கே தெரியாது நான் என்ன சொல்கிறேனென்று !"

★

நான் இந்த உரையாடல்களை இன்றைக்கு நினைத்துக்கொண்டாலும் சிரிக்கறேன்; அழுகிறேன்; மகிழ்கிறேன்; மருள்கிறேன். எனக்கு இந்த ஒப்பரிய பாடத்தைக் கற்றுக் கொடுத்தவள் எங்கோ போய் விட்டாள். இல்லை...இல்லை....நான் எங்கோ வந்துவிட்டேன். கண்ணிறைந்தவள் இல்லாத – கண்ணே தெரியாத, ஏதோ ஓர் இடத்திற்கு வந்துவிட்டேன். அதனுல் ஏற்பட்ட சினமோ......காலத்தின் விளையாட்டோ...என்றும் இனி நான் அவளைக் காணமுடியாது ஆம்....காணவே முடியாது ..அப்படித்தான் சொல்லிக் கொள்கின்றனர்

என் மனம் இடிந்த மாளிகையாகி விட்டது. இனி யாரும் இதில் குடியேற முடியாது. இந்த நினைப்போடுதான், நான் இடிந்துகிடக்கிறேன்; அயர்ந்துகிடக்கிறேன். என் மனம் அறிந்த ஒன்றிரண்டு நண்பர்களும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டனர். என்றுலும் பயனில்லை.

இப்போது எனக்கு இன்பம்தேவையில்லை. ஒரு துளி அமைதி கிடைத்தால் போதும். அதுவே போதும். எண்ணம் இதுவாக, இலக்கியத்திடம் அடைக்கலம் புகுந்தேன். இதழ் இதழாகப் புரட்டினேன். அவை சிரித்தன. இல்லை; அவை சிரிக்கவில்லை. அவள் சிரித்தாள். தாளுக்குத் தாள் அவள் சிரித்தாள். அவள் தாளுக்குத்தாள் நின்று சிரிக்க இடம் கொடுத்த அந்த மங்கை இலக்கியத்தின் பெயர் குறுந்தொகையாம்...

இலக்கியத் தலைவர்களை அழகர்கள் என்று சொல்லவேண்டியதில்லை. அவனவன் தன் வாழ்க்கைக்கு ஏற்ப ஏதாகிலும் ஒரு வாளையோ வேலையோ, ஈட்டியையோ வில் – அம்பையோ ஏந்திக்கொண்டிருப்பான். திரண்ட தோள் இருக்கும். அகன்ற மார்பு விளங்கும். அதில் மாலையும் விளங்கும். கொண்டையை எண்ணையிட்டு வாரி அள்ளிமுடித்து வரவும் செய்வான். இப்படிப் பழம்புலவர்கள் தாம் பாடிய ஆயிரக்கணக்கான பாடல்களிலும் அவர்களைக் காட்டி விட்டனர். இந்த மரபைத் தாண்டிவர விரும்பாத தேவகுலத்தான் என்ற புலவனும் இப்படி ஒரு தலைவனைப் படைத்து ஒரு தலைவியையும் உருவாக்கிக் காட்டுகிருன்.

அவனும் அவளும் மற்றவர்கள் சந்திப்பதுபோலவே சந்தித்தனர். இப்படி, சந்தித்ததும் உரையாடியதும் புனலாடியதும் விருந்துண்டதும் வழக்கம்போலவே நடந்து முடிந்தன. என்றுலும் "அதுஅது ஆக வேண்டிய நாளில்" ஆகவில்லை.

கல்லும் முள்ளும் உள்ள பாதையில் கள்ளத்தனமாக வருவதும் நள்ளிருளில் தழுவி மகிழ்வதும் ஒரு வீரச் செயல்தான். ஆனல் எவ்வளவு காலத்திற்கு வீரச் செயலிலேயே நிற்பது ?

கிளிகடியும் பெண்ணை தொலைவிலிருந்தும் அருகிலிருந்தும் காணலாம்; மெய்தொட்டும் பயிலலாம்; தோழியர்க்குத் தெரிந்தும் தெரியாமலும் அவன் தோளில் அவள் சாயலாம். ஆனல் எவ்வளவு நாட்களுக்கு இதே நிலைமை? ஒரே காட்சிக்குள் சுற்றிக்கொண்டேயிருந்தால் — ஒரே எல்லைக்குள் வளையமிட்டுக்கொண்டிருந்தால் என்ன பயன் ? காட்சி மாற மாறத்தானே காவியத்தின் விருவிருப்புக் கூடும். இதை அவனும் உணரத்தான் செய்திருக்கிருன். என்றுலும் வழக்கம்போலவே அவன் ஏதோ ஒன்றுக்குத் தயங்கிக்கொண்டிருக்கிருன். காலம் பறந்தாலும் கனவுகள் மிகுந்தாலும், ஆசைக்கு ஒரு தடையிருக்கிறது. இந்தத் தடையை அவன் மீறமுடியாது திண்டாடுகிருன்.

தோழியோ இதை வேறு வழியில் எடுத்துக்கொள்கிருள். களவொழுக்கத்திலேயே காலத்தைக் கழிக்க நினைக்கிருஞ ? தலைவியின் அன்பை இன்னும் சோதிக்கிருஞ ?–இப்படிப் பல எண்ணிய அவள் அவனை நேரடியாகவே கேட்கத் துணிகிருள். காலமும் வருகிறது,

காவுக்கும் ஆற்றுக்கும் ஓடிவந்து, தன்னேடு ஆடிப் பாடியவள் வீட்டுக்குள்ளேயே கிடப்பதால் அவள் வீட்டின்புறம் வந்து அவளைக் காண முனைகிருன். வேலி மருங்கிருந்து குறிப்பொலிகளால் அவளை அழைக்க, தோழி வருகிருள். தோழியின்பின் வந்த தலைவி பின் வாயிற்படியிலேயே நிற்கிருள். தோழி வேலியின் உள் நின்று கிண்டல் செய்கிருள். இலக்கியத்திற்கென்று புலவர்கள் சில பண்புகளையும் ஒழுகலாறுகளையும் வகுத்து வைத்திருக்கின்றனரே ! அந்த முறைகளுக்கு ஏற்பப் பேச வந்ததை நேரடியாகப் பேச மறுக்கிருள் தோழி. குறிப்பால் உணர்த்துகிருள்.

கிணற்றுநீரை வெள்ளமா கொண்டு போகப்போகிறது என்றிருந்திருக்கலாம் தலைவன். "அள்ளிப் பருக வேண்டிய நேரத்தில் அள்ளிப் பருகாவிடின் அதுவும் வீணுகிவிடுமே !" என்பதை உணர்த்தக் கருதிய தோழி நெஞ்சில் முன்னர் சொன்னபடி வேருேர் ஐயமும் எழுகிறது. தலைவியின் நட்பில் ஐயமா ? தாய்தந்தையர் தடுத்துவிட்டதால் வீட்டிலேயே கிடப்பதால், தலைவன் அவள் நட்பை ஐயுற்றுஞ ?–இப்படி எண்ணி அவள் பேசுகிருள்.

"இவளைக் காதலிக்கின்ற தலைவன் எப்படிப்பட்டவன் தெரியுமா ?அவன் தண் மலைச்சாரலில் வாழ்கிருன். அச்சாரலில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கரிய கிளைகளையுடைய மரத்தில் குறிஞ்சி பூக்கும். அம்மலர் பூக்கும் காலத்தையறிந்துகாத்திருந்து, அது பூத்ததும் அதன் தேனையெடுத்துச் சேர்த்துச் வைத்து உண்பர். அச்சத்தான தேன் பன்னிரு ஆண்டுக்கு ஒருமுறையே கிடைப்பதால்தான் அவ்வளவு பெருமையும் அருமையும். குறிஞ்சி மரம் பன்னிராண்டுக்கு ஒருமுறை பூத்தாலும், பெண்மை வாழ்வில் ஒரே ஒரு முறைதான் பூக்கும். குறிஞ்சி பூக்கும் மலையில் அவன் வாழ்கின்ருன். அவன் வாழ்க்கையின் உண்மைகளை அறியவில்லையே! பூத்துக் குலுங்கும் தளிர்க்கொடியை மணந்து போக அவன் இன்னும் துடிக்கவில்லையே? தலைவியின் நட்பில் அவன் ஐயுற்றுஞ? எனின் சொல்வேன்–அவள் நட்பை! பல மக்களும் வாழும் நீணிலம் அகன்றது. எண்ணிறந்த விண் மீன்கள் உலவும் வானம் பரந்தது. சொல்லரிய உயிர்கள் வாழும் கடல், ஆழம் காண முடியாதபடி ஆழ்ந்தது. ஆனல் அவள் நட்போ, நிலத்தைவிடப் பரந்தது; கடலைவிட ஆழமானது. ஆமாம்; அதற்கோர் அளவில்லை; ஒப்பில்லை. உடன் அவளைக் கைப்பிடித்து வாழ்ந்து நலம் பெறுவாயாக; எம் துன்பம் தீர்ப்பாயாக!"–இப்படிக் கருத்துப்பட அவள் பேசினுளாம். பின் என்ன நடந்ததென்பதைநீங்களே உணர்ந்து கொள்ள விடுக்கிறேன்.

அவள் சொன்னதாக அந்தப் புலவன் பாடிய பாடல் இது :

நிலத்தினும் பெரிதே;
வானினு முயர்ந்தன்று;
நீரினு மாரள
வின்றே; சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்
பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு
நாடனெடு நட்பே !

இது குறுந்தொகையின் மூன்றும் பாடல்.

நட்பின் உயர்வு–காதலின் துன்பம், இந்நேரம் விளங்கியிருக்கும். இப்போது சொல்லுங்கள்–நான் எப்போதோ இழந்த காதலியை எண்ணி எண்ணி, இப்போது வருந்துவது தவரு ? கடந்த நாள் புலவனைவிடக் கண்டுணதிரே எனக்கு ஆயிரம் பாடங்களைக் கற்றுத் தந்த அவளை நான் மறக்கமுடியுமா ?

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

வியாழன், ஞாயிறு, குரு என்ற வானப் பொருட்களின் அசைவிற்கேற்ப அமைக்கப்பட்டனவாம். இன்று நாம் கைக்கொள்ளும் வருடம், சித்திரை முதல் பங்குனி ஈருக உள்ள மாதங்கள், விழாக்கள், எல்லாம் வடமொழித் தடத்திலே உருளுபவைதான் ஆரியத்தின் பிடிப்பிற்குக் கணிதத்தின் சாயல் படிந்த மத முறைகள் என்றே நாம் கருத இடமேற்படுகிறது. இவை மெய்யான கணக்குகள் என்ற முடிவுக்கு வர இயலாது. எனினும் அவர்களது ஆர்வத்தை ஓரளவு புலப்படுத்துகிறது.

தமிழருடைய எண்ணம் மிக உயர்ந்த எண்ணம். பரந்த நோக்கம் ஒன்றுமட்டுமே பாதுகாப்பிற்கு உறுதி எனக் கருதிவிடமுடியாது. யானையையும் பூச்சிகள் அரிப்பதுண்டு; அரிமாவையும் அரவம் கொல்லும். விழிப்புணர்ச்சி வேண்டும். தமிழரின் அகப் பொருள், புறப்பொருள் சிற்பம் மற்றும் சித்த மருத்துவம் கணிதத்திற்குரிய அடித்தளத்தைக் காட்டுகின்றன. அது வெற்று வெளி. அதன்மேல் உருவான கட்டிடம் எழவில்லை. தெளிவானதோர் கட்டிடம் நமக்குத் தேவை. இன்றைய நிலையில் மொழி வழக்கு, திருவிழாக்கள், பெயர் சூட்டல், மேன்மையுறு தத்துவங் காட்டல், தனித்திறன் பேசுதல் எல்லாம் உணர்ச்சி பெற்று வளருங்கால் இன்னும் நாம் நமக்கென்று ஒரு காலக் குறிப்பைத் தீட்டாதிருத்தல் நன்றன்று. தமிழ் பிற மொழிச் சார்பின்றி வாழும் தகுதியுடையது என்றுல் வரிவடிவங்களையும், ஒலிக் குறிப்பையும் மட்டும் சொல்வதாகக் கருதுவது பொருத்தமன்று. முயற்சியிலும், முன்னேற்றத் துறைகளிலும் தமிழன் ஆர்வமிக்கான். கடல் கடந்து வணிகம் நடாத்தியவன், நல்லரசோச்சி எதிர் வல்லரசுகளை வென்றவன்; ஆயுதந் தாங்கியவன்; அறிவை மதித்தவன், காலக் குறிப்பின்றி, ஒரு முறைப்பாடின்றி வாழ்ந்திருப்பாஞ என்று ஐயமேற்படுகிறது. ஆயினும் தெளிவாக ஒரு காலத் தொகுப்பு இதுவரை தமிழர்க்குக் கிடைக்கவில்லை. ஆரிய வழக்கினைச் சார்ந்துதான் சித்திரை, வைகாசி, என்றும் பவ, யுவ, பீரபவா, தாது என்றும் கொள்ளப்படுகிறதேயன்றித் தமிழர்க்கென்று ஒரு தனி முறையில் இல்லை. காலக் குறிப்புதான் ஓர் இன மக்களின் திறனைச் சுட்டிக் காட்டும். நாகரிகமுடைய மக்கள் தமிழரைப்போல் பலருண்டு. அவருள் சிறந்த நாகரிகம் உடையவர்கள் என்ற பட்டியலில் சிலரே வருவர். அதில் தமிழருக்கும் இடம் உண்டு என உரைத்தல் வேண்டும். இதற்குக் கணித வளமும் அரசியல் நிருவாகத் திறனும் சான்ருய்க் காட்டலாம். கணிதம்தான் சிந்தனையின் செம்மையைக் குறிக்கும். இன்று நமக்குப் போதிய சான்றுகள் கிட்டவில்லை எனினும் ஒவ்வொரு நெறியிலும் தமிழ்ப் பண்பு என்று துண்டித்துக் காட்டும் தமிழரது தூய வழி கணித வாயிலாக ஏற்பட வேண்டும். இது காறும் தமிழர் முறை, தமிழர் மறை, தமிழர் பழக்கம், தமிழர் பண்பு, தமிழரிசை, தமிழர் கலை, தமிழரிலக்கணம் என்றெல்லாம் பகுத்துத் தெளிவாய் வாழ்ந்த தமிழ்ப் பெருங்குடி மக்கள் கையிற்கிடைத்த குறிப்புகளையும் அளவுகளையும் திரட்டி ஒழுங்குபடுத்த வேண்டும் காலக் குறிப்பில்லாமல வாழலாம் ஏனையவர் துணைக்கொண்டு. ஆனல் அது சிறந்த நாகரிகம் எனப்படும் தமிழர் நாகரிகத்திற்குக் குறை போலாகும். காலக் குறிப்புத்தான் வாழ்க்கையின் நோக்கம், வணிகத்தின் ஆதிக்கம், கல்வியின் கருத்து என்பர். அதைப் புறக்கணித்து வேறு வகைப்பட்ட துறைகளை வளர்ப்பதில் நிலைத்த பெருமையோ, உலகோர்க்கு உதவும் அறிவியற் பெருக்கமோ ஏற்பட வழியிராது. தமிழ்ப் புலவர் பெருமக்கள் இனியேனும் ஒருங்கு கூடித் தமிழர் எல்லோரும் நம்பிச் சாரத்தக்க ஒரு பொதுக் காலக் குறிபபை ஏற்படுத்த முயல வேண்டும். இதுவரைத் தமிழர் அலுவல்களைக் கணிக்கக் கிறித்தவக் காலக் குறிப்பே பயன்பட்டு வருகிறது. அந்த அளவு அதன் உதவிக்கு நன்றி. இனி வள்ளுவர் ஆண்டைப் பயன்படுத்தித் தெளிவோமாக. அதை மேலும் வகைப்படுத்தி மேலும் பயன் பெறுவோம். காலமே செல்வம்; காலமே இன்பம்; காலமே கருவூலம்என்பதை உணர்த்தத்தான் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும" என அறிவித்தனள் போலும் !

-வே. சௌந்தரராசன் பி. ஏ.

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

அதன் பெயர் என். சி. சி. படை. அந்தப் படையினரின் சட்டைதான் விறைப்பாக நிற்கிறது. காங்கிரசுக் காரனைக் கண்டால் அந்தச் சட்டையை அணிந்திருக்கும் அதிகாரி கூட நடுங்குகிருர். இந்தப் படையில் சேர்ந்து கவாத்துக்கென்று போகும் மாணவர்கள், பின் கிழட்டு வாத்தைப்போல் திரும்புவதையும் பார்த்திருக்கிறேன்.

கேரளத்தில் நாணயத்தையும் நேர்மையையும் காப்பதற்கென்றே பிறந்தருளியுள்ள காங்கிரசார் செய்துதவிய அருஞ்செயல்கள் பல. பிறர் சொத்துக்கு ஆசைப்படாத அந்தக் கணவான்கள் பொதுவுடைமையர் ஆட்சியை விரட்டியபின் செய்த சில செயல்கள் அரியன.

கள்ளிக்கோட்டில் தேசிய மாணவர் படையினரின் முகாம் ஒன்று போடப்பட்டது. பல கல்லூரி மாணவர் படையினரும் அங்கு திரண்டு முகாமில் பங்கெடுத்துக் கொண்டனர். இந்த முகாமின் செலவுக்காக தில்லி அரசினர் ஓரளவு நிதியும் ஒதுக்கியிருந்தனர். என்றுலும் முகாமுக்கு வந்த மாணவர்கள்படாத துன்பம் பட்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு வேளைதோறும் உணவு தரவும்,

அவர்களது ஆடைகளின் சலவைக் கூலியைத் தரவும்,

அவர்கள் படுப்பதற்கும் தங்குவதற்கும் சிறு சிறு அளவில் வசதியான குடிசைகள் கட்டித்தரவும்,

போதிய அளவு தண்ணீர் முதலிய வசதிகள் செய்து தரவும்,

மலம் சிறுநீர் கழிப்பதற்கும் குளிப்பதற்கும் தற்காலிகமான வசதிகள் செய்து தரவும்,

ஒரு மாணவனுக்கு நாளொன்றுக்கு ரூ. இரண்டு வீதம் மானியம் ஒதுக்கிப் பணம் தந்திருக்கின்றனர்.

ஆனுலும்...

அம்மாணவர்கள் சிமெண்ட் பூசிய வராந்தாக்களிலே குளிர் காற்றில் போர்வைகூடத் தரப்படாமல் படுக்க வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அழுக்கு ஏறிய உடைகளையே அணிவிக்கப்பட்டிருக்கின்றனர்.

சில மாணவர்களுக்கு, பிறருக்குக் கிடைத்த சிறிதளவு சோறுகூடக் கிடைக்கவில்லை.

கல்லூரியை ஒட்டியிருந்த வீடுகளுக்குச் சென்று உணவுப்பொருள் கிடைக்குமா என அவர்கள் அலைந்திருக்கின்றனர்.

சிலரின் பெற்ருேர், நிலையறிந்து தம் பிள்ளைகளுக்குப் உணவு அனுப்பி வைத்திடவே, அவர்கள் அது கொண்டு உண்டுள்ளனர்.

நிலைமை இப்படி மேலும் மேலும் மோசமாகவே அவர்கள் கடந்த செப்டம்பர் 14-ம் நாளன்று முகாமை விட்டு வெளியேறிவிடுவோம் எனப் புரட்சி செய்திருக்கின்றனர். ஆனுலும் அங்கிருந்த "கமாண்டர்" ஒன்றுமறியாதவர்போல் நடந்துகொண்டாராம்.

தில்லி அரசினர் மானியம் ஒதுக்கியிருந்தும் அவர்கள் நிலை இழி நிலை ஆனதேன்?

எல்லா வசதிகளுக்கும் இவ்வளவு செலவாகும் என்று ஒரு கணக்கிட்டு அரசினர் தந்த பணத்தால் ஒரு வசதியும் கிடைக்காததேன்? அது தான் வேடிக்கை!

அரசினர் ஒதுக்கிய பணத்தில் உணவுதருவதற்குமட்டும் ரூ.20000 செலவாகியதாம். அவ்வளவு அதிகத் தொகையைப் பெற்றது யார்? உணவுப் பொருள்களை வழங்கும் "காண்ட்ராக்ட்" எடுத்துக் கொண்டவரான காங்கிரசுக்காரருக்கே அந்த 20000 ரூபாயும் சென்றிருக்கிறது.

முகாமுக்கு வேண்டிய உணவினை அவரைவிடக் குறைந்த விலையில் தருவதாக பல ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) வந்தனவாம். தந்த பணத்தை எல்லாவற்றிற்கும் செலவழித்து முகாமை வெற்றியாய் நடத்த வேண்டிய "கமாண்டர்", உணவுக்குமட்டும் ரூ. 20000 தந்திருக்கிருர். அப்படித் தந்தும் உணவு கிடைக்காது திண்டாடிய மாணவர்கள் நடுத்தெருவில் அலைந்திருக்கின்றனர். ஏன் அய்யா, ஏன்?

மாணவர் படை முகாம் அடித்தது, அப்பெயரில் ஒரு குறிப்பிட்ட காங்கிரசுக்காரனுக்கு உதவவா?

இல்லை; தில்லியளித்த பணம் காங்கிரசாரின் அப்பன் வீட்டுச் சொத்தா? ஆத்தாள் கொண்டு வந்த சீதனமா?

ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் உயிர் தருவதாகச் சொல்லப்படும் படையமைப்பில் இவ்வளவு ஊழலா? "பொதுவுடைமையர் ஆட்சியில் பல ஊழல்கள்!" என்று கொக்கரிக்கும் காங்கிரசாரே, உம் கண்ணில் கிடக்கும் "உத்திரத்தை எடுத்துவிட்டு உத்தாரம் சொல்ல வாரும்!"

-"மதுரையான்"

ஆசிரியத் தோழருக்கு...

அன்புடையீர்,

"தென்றல்"லில் உங்கள் "சாவு"க் கட்டுரை கண்டு துன்பமுற்றேன். முன்னரே செத்துவிட்டதாகவும், இப்போது உடம்பும் செத்துவிட்டதென்றும் முடித்ததுடன் அமையாது, இதற்கெனப் படம் வேறு வெளியிட்டிருப்பது பெரிதும் வருந்துதற்குரியது. இதனை மிகுதியும் கண்டிக்கின்றேன். நேருவின் ஆண்டு நிறைவு பற்றிய கட்டுரை அற்புதமாயிருக்கிறது. அதில் வருகிற "மிஸ்டர் மதராஸ்" அவர்களை மறக்கமுடியாது. இளவழகனின் "பண்டைத் திராவிடம்" சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை.

தங்கள் அன்பன்,
முரு. சேதுராமன்.

ஆவினிப்பட்டி
21-11-'59.

அன்புடையீர்,

19-11-'59 மித்திரன் செய்தித் தாளில் ஏழுமலையானுக்கு வெல்லச்சர்க்கரை லட்டு என்ற தலைப்பில் ஆண்டவனுக்கு வெல்லச்சர்க்கரைலட்டுசெய்ய மாதம் ஒன்றுக்கு 200 மூட்டை வெல்லம் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. நாட்டு மக்கள் சர்க்கரைப் பஞ்சத்தால் அவதிபடுகிற நேரத்தில் தனிப்பட்ட ஒரு கோவிலுக்குமட்டும் மாதம் 200 மூட்டை தேவையென்ருல் ஏனைய கோவில்களின் மாதாந்திரத்தேவை என்னவாகும்? நாட்டின் சர்க்கரைத் தேவையில் பெரும்பகுதி ஆண்டவன்பேரால் செலவழிக்கப்படுவதை தடுத்து மக்களின் தேவைக்கு அவை செலவழிக்கப்பட மத்திய அரசு நடவடிக்கையெடுக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதை அரசாங்கம் உணர்ந்து செயல்படுதல் மிக அவசியம் என விரும்புகிறேன்.

தங்கள்
கே. தனிக்கோடி.

களப்பாள்,
20-11-'59.



அருமை நண்பரும், நெல்லை-வெங்கடாம்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் திரு. ச. பொன்னுசாமி பி. ஏ. அவர்கள் (முன்னுள் துணைத்தண்டல்நாயகம்) குமாரரும்ஆன திரு. **ச. பொ. கணேசன்** பி. ஏ., பாளையங்கோட்டை ஆசிரியர் பயிற்சிபள்ளித் தலைமை ஆசிரியர் திரு. சற்குண மார்த்தாண்டன் பி. ஏ., பி. டி. அவர்களின் செல்வி **புனிதவதி** (பி. ஏ.)யை, கடந்த 21-10-'59 அன்று பாளையங்கோட்டையில் மணந்தார் என்ற செய்தியை மகிழ்வுடன் அறிவிக்கிருேம். புதுமணமக்களை "வாழ்க! வாழ்க!" என வாழ்த்துகிருேம். வாழ்க! வாழ்க!

தென்னுடு கொண்டாடும்
பொன்னேடாய் வருகிறது!

"தென்றல்"
பொங்கல் மலர்
1960.

பொறுப்பாளர்,
"தென்றல்"
சென்னை-6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணைசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.